Registered as a news paper.

இலவசப் பிரதி

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-754)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 25 (28.04.2003) திங்கட்கிழமை இதழ் : 207



தளம் கைப்பற்றப்பட்டபோது, தளபதி கேணல் பானு கொடியேற்றுகிறார்.

## ஆனையிறவுத் தள வெற்றிவிழா விழாக்கோலம் பூண்டது பளை!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆனையிறவுத் தளம் கைப்பற்றப்பட்ட மூன்றாம் ஆண்டு வெற்றிவிழாவும், தீச்சுவாலைத் தாக்குதல் முறியடிப்பு வெற்றிவிழாவும் இன்று மாலை பளையில் நடைபெறவுள்ளது. இதற்காக அப்பகுதி முழுவதுமே எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

முகமாலையிலிருந்து பரந்தன் வரையுள்ள வீதிகள், தோரணங்களாலும், சிவப்பு மஞ்சள் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதுடன் வர்ண மின் விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இன்றைய வெற்றிவிழாவில் - கனரக ஆயுதக் கண்காட்சி, களமுனைத் தளபதிகளின் கருத்துரைகள், அனைத்துப் படைப்பிரிவுகளினதும் அணி நடை, போராளிக் கலைஞர்களின் எழுச்சி நிகழ்வுகள் என்பன இடம் பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (லி)

## மாநகரசபைக் காணியை மீள ஒப்படைக்க உத்தரவு

### பிரட்மன் அதிகாரிகளுக்கு விடுத்தார்

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான காணியை மீண்டும் யாழ். மாநகரசபையிடம் கையளிக்க, யாழ். வந்த பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் சம்மதம் தெரிவித்தார்.

முன்னதாக, இக்காணி படை முகாம் அமைப்பதற்காக இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டிருந்ததும், பின்னர் மக்கள் எதிர்ப்பினால் அக்காணியில் முகாம் அமைக்கப்படுவது நிறுத்தப்பட்டதும் தெரிந்ததே.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பிரட்மன் வீரக்கோன், நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ். அரச அதிபர் பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் பங்குபற்றினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



பொட்டுக்கேடுகள் செய்யிறவைக்குத்தான் பேப்பர்க்காரர் எண்டால் அலர்ஜி கண்டியே!

# பேச்சு பற்றி படையினருக்கு விளக்கவே பிரட்மன் விஜயம்

### பத்திரிகையாளர்களிடம் அவரே தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**"புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாகவும், அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் மேற்கொள்ளும் பேச்சு வார்த்தைகள் தொடர்பாகவும், வட - கிழக்கில் பணிபுரியும் அரச படையினருக்கு விளக்குமுகமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னை அனுப்பியுள்ளார்" என யாழ். வந்த பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.**

நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ். அரச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் முடிவில் பத்திரிகையாளர்களுடன் பேசும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில், நான் வட - கிழக்கின் சகல மாவட்டங்களுக்கும் சென்று அங்குள்ள கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகியவற்றிலுள்ள உயரதிகாரிகளையும் மற்றும் படையினரையும் சந்தித்து, அரசின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாக

(10 ஆம் பக்கம் பார்க்க)



## யாழ். செயலகக் கூட்டத்தில் பத்திரிகையாளர் அவமதிப்பு

யாழ். அரச செயலகத்தில் - அரச நிர்வாகங்களின் வெளிப்படைத்தன்மை பற்றியும், மக்களுக்கு அரசின் செயல்கள் தெரியவேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் - அரசாங்க அதிபர் பத்மநாதனுக்கும், செயலக அதிகாரிகளுக்கும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் எடுத்துரைத்துக் கொண்டிருக்கும்போதே, அக்கூட்டத்தைப் புகைப்படம் பிடித்த பத்திரிகையாளர்கள், செயலக உயரதிகாரி ஒருவரால் தடுக்கப்பட்டு, கூட்டத்தின் மத்தியில் அவமதிக்கப்பட்டனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது -

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், யாழ்.குடாநாட்டு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு நேற்று யாழ்.செயலகத்தில் கூட்டம் ஒன்றினை நடத்தினார்.

இக்கூட்டத்தில் பல அதிகாரிகளும், மக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டபோதிலும் பத்திரிகையாளர்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகவே கடற்புலிகள் - கடற்படை ஒழுகவேண்டும்

### போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு புதிய சிபார்சு

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கையளிக்கப்பட்ட முதற்பணி அறிக்கை வாபஸ் பெறப்பட்டு, இரண்டாவது கட்டத் தகவல் அறிக்கையில் திருத்தங்கள் செய்யப்பட்டு - இரு தரப்பிடமும் அது கையளிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

புதிய தகவல் அறிக்கையின்படி, தெரிவிக்கப்பட்டுள்ள சிபார்சுகள் வருமாறு -

கடற்பரப்பில் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு அமைவாக - தேசிய, சர்வதேச சட்டங்களுக்கு அமைய இரண்டு தரப்பும் நடந்துகொள்ள வேண்டும்.

கடற்பகுதிப் பிரச்சினைகள் தொடர்பாக உயர்மட்டக்கொள்கை வகுப்பாளரிடையேதான் ஆராய்ந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவிடம் ஒப்படைக்க ஆறு பவுண் கேடயம்

### மன்னார் மக்கள் வழங்குவர்

இன்று நடைபெறும் ஆனையிறவு வெற்றி விழாக் கொண்டாட்டங்களின் போது, மன்னார் மாவட்ட மக்கள் ஆறு தங்கப்பவுண் நினைவுக் கேடயத்தினை கொண்டுசென்று கையளிக்கவுள்ளனர்.

இந்த நினைவுக் கேடயம் விழாவில் கலந்துகொள்ளும் விடுதலைப் புலிகளின் தளபதிகளிடம் கையளிக்கப்பட்டு, அது விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் சேர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடற்புலிகளுக்கு அங்கீகாரம்; முன்னாள் தளபதிகள் எதிர்ப்பு!

விடுதலைப் புலிகளைத் தனியான கடற்படைப் பிரிவாக அங்கீகரிப்பது தொடர்பான கண்காணிப்புக் குழுவின் சிபார்சுக்கு, முன்னாள் படைத் தளபதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் சிசில் திசேரா இது பற்றிக் கூறியபோது - ஒரு நாட்டில் ஒரு கடற்படை மட்டுமே இருக்க முடியும். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நாட்டின் உள்விவகாரங்களில் தலையீடு செய்ய அதிகாரம் கிடையாது எனத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் விமானப்படைத் தளபதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் உன்னத மனிதனை இழந்தது!

### முன்னாள் ஆயர் மறைவுக்கு புலிகள் இரங்கல்

ஆண்டகை தியோகுப்பிள்ளை அவர்களின் மறைவுச் செய்தி, மக்களைக் கலங்கி நிற்கச் செய்துள்ளது. ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் ஓர் உன்னத, மகத்தான மனிதரை இழந்து நிற்கின்றது என, முன்னாள் யாழ். ஆயரின் மறைவுக்கு விடுதலைப் புலிகளின் அரசியற்துறை விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஆயர் தியோகுப்பிள்ளை மனித நேயம்மிக்கவர். அறிவாற்றல் உள்ளவர். தமிழ்மொழியின் பால் ஆழ்ந்த பற்றுக்கொண்டவர். தமிழினம் சுதந்திரமாக வாழவேண்டும் எனத் தினந்தினம் யாசித்தவர். சேவையாற்றிய இடங்களிலெல்லாம் தனது முத்திரையைப் பதித்து மனித மனங்களில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
(சி-730) 01-505632, 074-612656, 01-390128

# ஆனந்தசங்கரி தொடர்பில் கட்சிக்குள் முரண்பாடு இருக்கவே செய்கின்றது!

## கூட்டணி செயலாளர் நாயகம் சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்றத்திற்கான தேர்தல் எந்தவேளையிலும் வரக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. எனவே, தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தேர்தலை எதிர்கொள்ள இப்போதே தயாராக வேண்டும் என நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும்போது, தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும், திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.



நேற்றைய கூட்டத்தில் கூட்டணிப் பிரமுகர்கள்

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்-

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி)யும் அடுத்தமாதம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடவுள்ளன. இன்று இருக்கும் அரசியல் நிலைமையில், சந்திரிகா அம்மையார் எந்த வேளையிலும் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலை அறிவிக்கலாம். இதனைவிட உள்ளூராட்சித் தேர்தலுக்கும் புதிதாக நியமனப்பத்திரம் கோரப்படவுள்ளது. இந்தநிலையில் கூட்டணியினராகிய நாம் எமக்குள் ஒற்றுமையையும், பலத்தையும் அதிகரிக்க வேண்டும். எமக்குள் நிலவும் முரண்பாடுகள் பற்றி மனந்திறந்து பேசுதல் அவசியம்.

எமது கட்சியின் தலைவர் ஆனந்தசங்கரி தொடர்பாக சில முரண்பாடுகள் எமது கட்சிக்குள் இருக்கின்றபோதிலும், அவர் இங்கு பிரசன்னமாயிருக்காத நிலையில், அவர் பற்றிப் பேசுவது பொருத்தமானதல்ல. அவர் லண்டனிலிருந்து திரும்பியதும் எமது கட்சி உறுப்பினர்களுடன் இவைபற்றிப் பேசி சில முடிவுகளை மேற்கொள்ளவுள்ளோம்.

இனப்பிரச்சினை தொடர்பாக, புலிகளுடன் மட்டுமே பேசவேண்டும். புலிகளை இலகுவில் ஏமாற்றிவிட முடியாது. தமிழர்கள் ஒன்றுபட்டு நிற்பதைப்பார்த்து, சிங்களவர்கள் அஞ்சுகிறார்கள். இந்தநிலைமையை மாற்றிவிட அனுமதிக்க முடியாது. யுத்தம் இனியும் எமக்கு வேண்டாம். சமாதானமே எமக்கு முக்கியம். இன்றைய காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் எமது மக்களின் நன்மை கருதி மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். புலிகளைப் பேச்சு மேசைக்கு கொண்டுவருவதற்கான முயற்சியில் அரசு தளராது ஈடுபடவேண்டும் என்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமகாராஜா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் - நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ரவிராஜ் உட்பட கூட்டணிப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். (சு,09)





அண்மையில் நடைபெற்ற நெடுந்தீவு பிரதேச செயலகர் பிரிவுக்கான வருடாந்த விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட பிரதம, கௌரவ, சிறப்புவிருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் - விளையாட்டு விழாவில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைத் தட்டிக்கொண்ட உதயசூரியன் விளையாட்டுக் கழகத் தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் நெடுந்தீவு அரசியற்துறைப் பொறுப்பாளரிடம் இருந்து சுழற்கிண்ணத்தைப் பெறுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (113)

# வடமராட்சி பொது அமைப்புக்கள் தலைவருக்கு வெற்றிக் கேடயம்

ஆனையிறவு வெற்றிச் சமரை பாராட்டி, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு வெற்றிக் கேடயம் ஒன்றினை வடமராட்சி கிழக்கு பொது அமைப்புக்கள் வழங்கவுள்ளன.

வடமராட்சி கிழக்கு வளம் பேணல் சங்கம் மற்றும் விளையாட்டுக்கழகங்கள் இந்த வெற்றிக் கேடயத்தை வழங்கவுள்ளன.

இன்று பளையில் நடைபெறவுள்ள ஆனையிறவு வெற்றிச்சமரின் வெற்றிப் பெருவிழாவில் வைத்து, தலைவருக்கான மூன்று அடி உயரமான வெற்றிக் கேடயம் கையளிக்கப்படவுள்ளது.

தலைவருக்கான வெற்றிக் கேடயம் - வடமராட்சி கிழக்கிலுள்ள வளம் பேணும் சங்கத்திலிருந்து வாகன தொடரணியாக எடுத்துச் செல்லப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (23)

# புலிகளின் அறிவிப்புப் பற்றி பொ.ஐ.மு ஜனாதிபதி மாளிகையில் ஆராயும்!

சமாதானப்பேச்சுவார்த்தைகளில் இருந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் தற்காலிகமாக இடை விலகுவதாக அறிவித்துள்ளமை தொடர்பாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்திய நிறைவேற்று செயற்குழு அடுத்த சில நாட்களில் கூடி ஆராயவுள்ளது.

விடுதலைப் புலிகளின் இந்த தீர்மானம், அரசியலில் எத்தகைய நிலைமையை ஏற்படுத்தும் என்பது தொடர்பாகவும், இந்தக் கூட்டத்தில் ஆராயவுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், விடுதலைப் புலிகள் எடுத்துள்ள இந்த தீர்மானம் பற்றி அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

இந்தக் கூட்டம் அடுத்த இரண்டு தினங்களில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் என்றும் ஜயரத்ன தெரிவித்தார்.

# பாடசாலை அதிபர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள்!

## கல்வியமைச்சு நடவடிக்கை

நாட்டிலுள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும், மோட்டார் சைக்கிளை வழங்க கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மிகவும் குறைந்த விலையில் இலகு தவணைக் கட்டண அடிப்படையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும் என்று, பாடசாலை கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதிபர்கள் தம்மிடம் விடுத்த வேண்டுகளை அடுத்து, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மிக விரைவில் இத்திட்டம் அமுல்படுத்தப்படும் என பாடசாலைக் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

# வெண்புறா அமைப்பு திருமலையிலும் செயற்பாடு

(திருகோணமலை)

நோர்வே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன், வெண்புறா நிறுவனத்தின் சேவை, திருகோணமலை மூன்றாம் கட்டை ஆனந்தபுரி என்னும் இடத்தில் இன்று காலை 10 மணிக்கு வைபவரீதியாகத் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம், கண்ணிவெடிகள், மிதிவெடிகளால் அவயவங்களை இழந்தவர்களுக்குச் செயற்கை அவயவங்களைப் பொருத்தும் பணிகளை ஆற்றிவருகின்றது.

வன்னியில் இனம் காணப்பட்ட 10 இடங்களில் இந்நிறுவனம் தனது தொடர்பகங்களை ஏற்படுத்தி பணிகளை ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மௌனகுரு கடவுள் சுவாமிகள் 97 ஆவது ஜெயந்தி தினம்



தன்னை நாடி வருகின்ற மெய்யடியார்களின் மனக்குறைகளைப் போக்கி, மாறாத நோய்களை மாற்றி, அவர்களின் பசிக்கு உணவளித்து கேட்கும் செல்வங்களை அள்ளிவழங்குகின்ற தொண்டமானாறு ஆற்றங்கரை முருகப்பெருமான் காலத்திற்குக் காலம்- பல சித்தர்களையும், ஞானிகளையும் இந்த ஆலயச்சூழலில் வாழச்செய்து அவர்கள் மூலமாகவும், அடியார் பெருமக்களின் குறைகளைப்போக்கி ஞானத்தைப் பரப்பிவருகின்ற அற்புதத்தை ஆற்றிவருகிறார். இந்த வகையில் மௌனமாகச் சந்நிதியில் வாழ்ந்து, அடியார்களின குறைகளைப் போக்கி அவர்களை ஆத்மீகப் பாதையில் வழிநடாத்தி ஞானத்தைப் பரப்பிய மௌன குரு கடவுள் சுவாமிகளின் 97 ஆவது ஜெயந்தி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி இன்று உடுவில் - 'கடவுள் சந்நிதி' இல்லத்தில் விசேட பூசை, பஜனை, மகேஸ்வர பூசை என்பன இடம்பெறுகின்றன.


**சிறு விளம்பரம்**

**பயிற்சி வகுப்புக்கள்**

தையல், கேக்ஐசிங், பூவேலை, சிகை அலங்காரம், தட்டச்சு, போன்ற பல பயிற்சி வகுப்புகள் 2 பிரிவாக 01-05-2003 அன்று 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதால் முற்கூட்டியே தொடர்பு கொள்ளவும். வெளிநாடு செல்வோருக்கு விரைவில் பயிற்சி அளிக்கப்படும். இடம்- ஸ்ரீசாயி நிறுவனம், மானிப்பாய் வீதி (யாழ்வீதி), உரும்பிராய் சந்தி. (321)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும்

ஒரே தின வெளியீடு

சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த

அரசு

(குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்)

10.30, 2.30, 6.30, 9.30

(சி-732)

நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்

விஜய், ரம்பா நடித்த

என்றென்றும் காதல்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)

CHINA STRIKE FORCE

(சி-731)


# இன்றைய நாள் இனிய நாள்

**28-04-2003 - திங்கட்கிழமை**

**மேடம்** :- சந்தோஷ மிகுதி, சரீரசுகம், பெரியோர் மதிப்பு, வாகன சுகம், தொழில் விருத்தி.

**இடபம்** :- தேகசுகக்குறைவு, தொழில்கேடு, வீண்பிரயாசை, தனதானியச் செலவு.

**மிதுனம்** :- அக்கினி ஆயுத பயம், இனசன சிநேகிதரால் கவலை, வீண்பழி கேட்டல்.

**கர்க்கடகம்** :- பயனற்ற பிரயாசம், நேத்திரரோகம், பொதுசன மதிப்பு, சிநேகலாபம்.

**சிங்கம்** :- சத்துரு வெற்றி, நன்மதிப்பு, பெரியோர் சிநேகம், சிநேகலாபம், குடும்பச்சிறப்பு.

**கன்னி** :- ரோகம், இரத்தப் பெருக்கு, குடும்பச்சிறப்பு, சிநேக நன்மை, பூமிலாபம்.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

**துலாம்** :- சத்துரு பயம், இனசனக் கொண்டாட்டம், நற்குண விருத்தி, உயர்ந்த நிலை.

**விருச்சிகம்** :- காரிய வெற்றி, மனமகிழ்ச்சி, தொழில்விருத்தி, பிரயாச மிகுதி, பெரியோர் மதிப்பு.

**தனு** :- சரீரச்சோர்வு, பிரயாணக் கஷ்டம், நிலைப்பிரிவு, நேத்திரரோகம்.

**மகரம்** :- புத்தித்திறமை, தொழில் விருத்தி, அதிக லாபம், குடும்ப மகிழ்ச்சி.

**கும்பம்** :- இனசன விரோதம், குடும்ப மனஸ்தாபம், நிலைமாற்றம், வாக்குக்கலகம்.

**மீனம்** :- இல்லச்சிறப்பு, காரிய சித்தி, தொழில் நன்மை, உறவினரால் நன்மை, களஸ்திரசுகம்.

# எந்தக் காரணத்தைக் கொண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டாம்!

## பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் இருதரப்பிடமும் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்கவேண்டுமென்று பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆயர்கள் மாநாட்டில் உரையாற்றியபோதே பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் இந்த அழைப்பை விடுத்தார்.

ஆயர்கள் மாநாட்டில் அவர் மேலும் உரையாற்றுகையில், எந்தக் காரணத்தைக் கொண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கக்கூடாது. பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வைக் காணுங்கள்.

தற்காலிகமாக விலகிக்கொண்ட புலிகள், மீண்டும் பேச்சுக்களில் கலந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. அரசியல் தீர்வுக்கு நாட்டைக் கொண்டுவந்து சமத்துவ உரிமைகளையும், தீர்வையும் வழங்க முன்வரவேண்டும் என்றும் பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் மேலும் அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, வவுனியா விகாரையின் விகாராதிபதியான வணசியம்பல விமலசார தேரோ, சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் குறித்து தெரிவிக்கையில்,

நாடு இப்போது முக்கியமான காலகட்டத்தில் இருக்கிறது. இந்தக் கட்டத்தில் யுத்தத்தைப் பற்றி போதிக்காமல் - நாட்டுக்கும், நாட்டில் வாழும் சகல சமூகங்களுக்கும் ஒளிமயமான வாழ்க்கையை ஏற்படுத்தித் தர இரண்டு தரப்புக்களும் முன்வர வேண்டும்.

தெற்கில் வாழும் பெரும்பான்மையான பௌத்த பிக்குகள் அமைதியையே விரும்புகின்றனர். மீண்டும் ஒரு கொடூரமான போர் ஏற்படுவதை எவரும் விரும்பவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ரோக்கியோ மாநாட்டில் புலிகள்; அனைத்து தரப்பும் விரும்புகின்றன!

## சர்வதேச நாணயநிதியப் பிரதிநிதி

(கொழும்பு)

ரோக்கியோவில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் - விடுதலைப் புலிகள் கலந்துகொள்வதையே அனைத்துத் தரப்பினரும் விரும்புவதாகச் சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜேர்மி கார்ட்டர் இது தொடர்பாகக் கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோது,

உதவிவழங்கும் மாநாட்டில் கலந்துகொள்ளும் நாடுகளும் சரி, நிதி அமைப்புக்களும் சரி - விடுதலைப் புலிகள் இதில் கலந்துகொள்வதையே விரும்புகின்றன. எனவே புலிகள் தமது முடிவை மாற்றிக் கொள்ள முன்வரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# ரோக்கியோ மாநாடு பற்றிய முடிவு; இந்தியா மறுபரிசீலிக்க வேண்டும்!

## அகாஷி ஹிந்துவுக்குப் பேட்டி

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இதயசுத்தியுடன் முன்னெடுக்கவேண்டும் என்று ஹிந்து பத்திரிகைக்கு ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்துள்ளார்.

ஹிந்து பத்திரிகையின் ஆசிரியர் சி.என்.ராமுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ரோக்கியோவில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில். இந்தியா பங்கேற்கப்போவதில்லை என்று எடுத்துள்ள முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

விடுதலைப் புலிகள் - இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கமாக இருக்கலாம். ஆனால், ஒஸ்லோவில் அண்மையில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பங்கேற்றிருந்தனர். அந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ள அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் பங்குபற்றியதையும் அகாஷி சுட்டிக் காட்டினார்.



விடுதலைப் புலிகளை ஆதரிக்குமாறு தாம் இந்தியாவை வற்புறுத்தவில்லை என்றும் அகாஷி மேலும் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

# இயன் மாட்டின் மீண்டும் வருகிறார்!

சர்வதேச மன்னிப்புச்சபையின் முன்னாள் தலைவர் இயன் மாட்டின் மீண்டும் அடுத்தமாதம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

புரிந்துணர்வு உடன்பாடு அமுலாக்கப்பட்டதன் பின்னர், மனித உரிமை விவகாரங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் குறித்து ஆராய்ந்து அறிந்துகொள்வதற்கே இயன் மாட்டின் கொழும்புக்கு வரவுள்ளார்.

இவர் தனது விஜயத்தின் ஒரு கட்டமாக வன்னிப்பகுதிக்கும் விஜயம் செய்து, விடுதலைப் புலிகளின் பிரமுக்ர்களுடன் கலந்துரையாடல் நடத்தலாம் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

இதேவேளை, கொழும்புக்கு வரும் இயன் மாட்டின் - மனித உரிமைகள் தொடர்பான தற்போதைய நிலவரம் குறித்து கலந்துரையாடல் நடத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் அழைப்புவிடப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

# அபிவிருத்தி, புனர்வாழ்வுக்கு சுவிஸ் அரசாங்கம் உதவி!

(பேர்ண்)

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வடக்கு - கிழக்குப் பகுதிகளின் புனரமைப்புப் பணிகளுக்குக்கென சுவிற்சர்லாந்து அரசாங்கம் 659 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளது.

சுவிஸ் அரசின் தெற்காசிய விவகாரப் பிராந்தியப் பிரிவில் தலைவர் ருடோல்வ் இம்கூவ் - செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

சமாதானப் பேச்சுக்களின் மூலம் கட்டம் கட்டமாகவே புனர்வாழ்வுப் பணிகளை ஆரம்பிக்க உதவமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். தற்போதைய சமாதான முயற்சிகளின்மூலம் உறுதியான அமைதித் தீர்வு கிடைக்குமெனச் சுவிஸ் அரசாங்கம் நம்புகிறது.

அரசும் - புலிகளும் வேண்டுகோள் விடுத்தால் - சுவிற்சர்லாந்தின் சமஷ்டி குறித்துத் தேவையான உதவிகளைச் செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப் புலிகள் தொடர்பான அமெரிக்க அணுகுமுறை தவறானது!

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அமெரிக்காவின் அணுகுமுறை தவறானது. தற்போதைய சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப் போனதற்கு அமெரிக்காவே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

மூன்று முக்கிய இடதுசாரிக் கட்சிகள் இணைந்து மேதினத்தை முன்னெடுக்கவுள்ளது தொடர்பாக நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன இந்தத் தகவலை வெளியிட்டார்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஜே.வி.பியும், அநுரா பண்டாரநாயக்கவும் தெரிவித்துவரும் கருத்துக்களைத் தாம் எதிர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் - போர் இல்லாத சமாதானம் என்ற தொனிப்பொருளில் இவ்வருட மேதினத்தில் புதிய இடதுசாரி முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, சமசமாசக்கட்சி என்பன இணைந்து பங்கேற்கப்போவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.





மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினரால் சங்கானை வைத்தியசாலைக்குப் பற்சுத்திகரிக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது. லயன் சி.கேசவராஜன் - வைத்தியசாலை வைத்திய அதிகாரியிடம் பற்சுத்திகரிப்பு இயந்திரத்தை கையளிப்பதைப் படத்தில் காணலாம்

# காஞ்சிரங்குடா தமிழருக்கு ஒரு நீதி; மூதூர் முஸ்லிம்களுக்கு இன்னோர் நீதி!

## அம்பாறை எம்.பி. சந்திரநேரு ரணிலுக்கு கண்டனம்



முஸ்லிம்கள் அல்லது சிங்களவர்கள் அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்டால், உடனடி நிவாரணம் வழங்கப்படுகிறது. ஆனால், தமிழருக்கு அவ்வாறு கொடுக்கப்படுவதில்லை என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தின் முழுவிபரமும் வருமாறு,

காஞ்சிரங்குடாவில் நடைபெற்ற இராணுவத் துப்பாக்கிச் சூட்டில் இறந்த ஏழுபேருக்கும் ஆரம்பத்திலே தாங்கள் நஷ்டஈடு தருவதாக உறுதியளித்து, அது பத்திரிகைகளிலும், ஊடகங்கள் மூலமாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

அவ்வாறு செய்திகள் வெளிவந்தும், எதுவித உதவியும் தங்களிடமிருந்து கிடைக்கவில்லை. அதன்பின்பு இரு மாதங்களுக்கு முன்பு அலரி மாளிகையில் தங்கள் இல்லத்தில் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்தபொழுது இதை நான் வலியுறுத்தினேன்.

உடனடியாகக் கவனத்திற்கு எடுப்பதாகக் கூறினீர்கள். ஆனால், மனம்வருந்தவேண்டிய விடயம் என்னவெனில், பல கடிதங்கள் அனுப்பியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

ஆனால், அதன்பின்பு நடந்த வாழைச்சேனை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கப்பட்டது. அதன்பின்பும் திருகோணமலை - மூதூரில் நடந்த அசம்பாவிதத்தில் பாதிக்கப்பட்டவர்க ளுக்கு நஷ்டஈடு ஒதுக்கப்பட்டுவிட்டது.

ஆனால், காஞ்சிரங்குடாவில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் எதுவித சிறு உதவியேனும் கிடைக்கவில்லை. அவர்கள் தமிழர்கள் என்ற காரணமோ தெரியாது.

முஸ்லிம்கள் அல்லது சிங்களவர்கள் அசம்பாவிதத்தில் பாதிக்கப்பட்டால் உடனடி நிவாரணம் கொடுக்கப்படுகிறது. ஆனால், தமிழர்கள் பாதிக்கப்பட்டால் ஒன்றும் கிடைப்பதில்லை. இதுவே கடந்த காலத்திலிருந்து தமிழ் மக்களுக்கு இழைத்து வரும் அநீதியாகும்.

இன்றைய சுமுகமான காலகட்டத்திலும்கூட தமிழ் மக்களை இவ்வாறு நிராகரிப்பது - தமிழ்மக்கள் மத்தியில் மனக்கசப்பினை ஏற்படுத்தியுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பொதும்க்கள் கேட்கும் கேள்விகளுக்கு என்னால் பதிலளிக்கமுடியாதுள்ளது.

தயவுசெய்து இவ்விடயத்தினைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் காலத்திலும் பாரபட்சம் பார்க்காமல் தமிழ் மக்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கிறேனென அக்கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிங்கள - தமிழ் விவசாயிகள் மட்டக்களப்பில் மாநாடு!

(மட்டக்களப்பு)

சிங்கள - தமிழ் விவசாயிகள் இணைந்து மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலையில் இரண்டு நாள் மாநாட்டை நடத்தவுள்ளதாக ஜாதிக கொவி பெரமுன என்ற விவசாயிகள் சங்கத்தின் தலைவர் ரட்ணா கமகே தெரிவித்தார்.

விவசாயிகள் எந்தப்பாகுபாடும் இன்றி ஒற்றுமையுடன் இருப்பதை வெளிப்படுத்தும் வகையில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில், விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கருணா பிரதம விருந்தினராகக் பங்கு கொள்ளவிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஆயிரத்து ஐநூறு மில்லியன் ரூபா நஷ்டஈடு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தரவேண்டும்!

## கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பிரதமருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிக்கையொன்றினை பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளது.

நேற்று யாழ். அரச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் பங்குபற்றிய பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனிடம், பிரதமருக்கு முகவரியிட்ட இவ்வறிக்கையினை யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் க.கனகலிங்கம் கையளித்தார்.

அவ்வறிக்கையில் முழுவிபரமும் வருமாறு -

யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றிவரும் அங்கத்துவ ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களின் பாதிப்புக்கள், இழப்புக்கள் தொடர்பாகக் குரல் கொடுக்கவேண்டிய பொறுப்பும், கடமையும் இச்சமாசத்திற்குள்ளது என்பதனால், பின்வரும் விடயங்களைத் தங்களின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

யாழ்.மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ.சங்கங்களுக்கு இதுவரை சுமார் 1500 மில்லியன் ரூபாவரை இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆதலால் இவ்விழப்புக்களுக்கான நட்டஈடு உடன் வழங்கப்படவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 5000 இற்கு மேற்பட்ட ப.நோ.கூ.சங்க ஊழியர்கள் கடமைபுரிகின்றார்கள். இவர்களுக்குப் பெரும்பாலும் சம்பள அதிகரிப்போ அல்லது மேலதிகக் கொடுப்பனவுகளோ இல்லை. அதே வேளை, இவர்களது சொத்துடைமைகளுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு எவ்வித நட்டஈடும் வழங்கப்படவில்லை.

அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அபாயப் படிகளுமில்லை. குறைந்த சம்பளத்திற்குப் பணிபுரியும் இவர்களது நிலை கவலைக்கிடமாகவுள்ளது. ஆதலால், சம்பள உயர்ச்சி, அபாயப்படி, நட்டஈடு என்பன இப்பணியாளர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும்.

தமது சொந்த எல்லைப் பரப்பிற்குள் சென்று தலைமை அலுவலங்களை, கிளைகளைத் திறந்து செயற்படமுடியாதவாறு, உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால், சில ப.நோ.கூ.சங்கங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே, உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்கி ப.நோ.கூ.சங்கங்களைச் சிறப்பாகச் செயற்பட அனுமதிக்கவேண்டும்.

திறந்த பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகத் தனியார்துறையுடன் போட்டிபோட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், தொழிற்பாடு மூலதனம் இன்றி ப.நோ.கூ.சங்கங்கள் இருப்பதால், இலகு கடன்கள் வங்கிகள்மூலம் ஏற்படுத்தித் தரவேண்டும்.

வடபகுதி விவசாய உற்பத்திப் பொருட்களிற்கான சந்தை வாய்ப்பை தென்பகுதிகளில் ஏற்படுத்தித்தர வேண்டும்.

ப.நோ.கூ.சங்கங்கள் புதிய கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்ள நிதி ஆதாரங்களைப் பெற்றுத்தர வேண்டும்.

ப.நோ.கூ.சங்கங்கள் தமக்கான நிவாரணப் பொருட்களை, யாழ். விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினூடாகக் கொள்வனவு செய்து விநியோகிக்கும் உரிமையைத் தரப்படவேண்டும்.

அரசு - விடுதலைப்புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டவை அனைத்தும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. இவை நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லி)

### அரசாங்கம் கலந்துகொள்ளும்

ரோக்கியோ நிதியுதவி மாநாட்டுக்கு விடுதலைப் புலிகள் வருகை தராவிடினும், இலங்கை அரசு இம் மாநாட்டில் கலந்துகொள்ளும் என 'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# இனந்தெரியாத நபர்களால் மிரட்டப்பட்ட மீனவர்கள்

## வடமராட்சிக் கடலில் சம்பவம்

வடமராட்சி கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்கள் இனந்தெரியாதோரால் அச்சுறுத்தப்பட்டதுடன், அவர்களிடமிருந்த மீன்களும் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில்- இன்பருட்டி கடற்தொழில் சங்கத்தைச் சேர்ந்த வி.செல்வதாஸ், யோ.சுந்தரவடிவேல் ஆகியோரே எச்சரிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து பெருமளவான மீன்களும் அபகரித்துச் செல்லப்பட்டன.

சம்பவதினம் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை, பாரிய மீன்பிடி வள்ளம் இவர்களது படகை வழிமறித்தது.

மீன்பிடிப்படகு நின்றதும் அதிலிருந்தவர்கள் சிங்களத்தில் சில நிமிடங்கள் உரையாடியுள்ளனர். பின்னர் சற்றுநேரத்தில் மேலும் சில வள்ளங்கள் நெருங்கி மீன்பிடிப்படகைச் செல்லவிடாது தடுத்துள்ளன.

வள்ளங்களில் வந்த சிலர் மீன்பிடிப்படகினுள் குதித்து, மீனவர் இரு வரையும் விடுதலைப்புலிகளா என மிரட்டியதுடன், மீன்களைத் தமது வள்ளங்களில்போட முற்பட்ட வேளை, அதைத் தடுத்த செல்வதாஸ் என்பவரைக் கடலினுள் தூக்கிவீசினர். பின்னர் பெருமளவு மீன்களைத் தம் வள்ளங்களில் போட்டுச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக வடமராட்சி கடற்தொழில் சங்கங்களின் சமாசத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (23)

# ஒப்பந்த அடிப்படையில் சமுர்த்தி அதிகாரிகள்!

வடக்கு - கிழக்கில் 189 சமுர்த்தி முகாமையாளர்களையும், 935 அபிவிருத்தி அதிகாரிகளையும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்குவதற்கு நிதியமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார்.

புதிதாகச் சமுர்த்தி அதிகாரிகளைச் சேர்த்துக்கொள்வது இன்னும் சில மாதங்களில் நடைமுறைக்கு வரலாம் என்று சமுர்த்தி ஆணையாளர் டாக்டர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

### யாழ்.வருகை

மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா, ஜெயந்தன் படையணி துணைத்தளபதி தயாபரன் ஆகியோர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

இவர்கள், யாழ்.பல்கலைக்கழகத்தில் பயிலும் மட்டு - அம்பாறை மாவட்ட மாணவர்களைச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் சந்தித்து உரையாடினர்.

# மோசமான நிலையிலுள்ள நெத்தலி ஆற்றுப் பாலம்

(நமது நிருபர்)

பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் நெத்தலி ஆற்றுப்பாலம் மிகவும் மோசமானநிலையில் சேதமடைந்துள்ளது.

இவ்வீதியால் பயணிக்கும் பயணிகள் மற்றும் கனரக வாகனங்கள் என்பன விபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பல்வேறு புனரமைப்புப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றபோதும், இந்தப் பாலம் திருத்தப்படாமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (108)



தந்தை செல்வாவின் நினைவுதினத்தன்று திருமலையிலுள்ள சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள அன்னாரது சிலைக்கு மலர்மாலையிட்டு அஞ்சலி செலுத்திய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் மற்றும் பிரமுகர்களைப் படத்தில் காணலாம்.

### வெளிவிவகார செயலாளராக பேனாட்

அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளராகப் பணியாற்றிவரும் பேனாட் குணதிலக வெளிவிவகார அமைச்சின் செயலாளராகப் பதவியேற்கவுள்ளார்.

தற்போது இந்தப் பதவியை வகித்துவரும் நிஹால் றொட்றிகோ சீனாவுக்கான தூதராகச் செல்லவிருக்கிறார்.

பேனாட் குணதிலக அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களில் முக்கிய பங்கு வகித்துவருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.


## வாழ்க வளமுடன்




### மூன்றாவது அகவையில்



பெயர் :வ.கேசவர்ணன்
முகவரி :கல்வயல், சாவகச்சேரி.

### ஐந்தாவது அகவையில்

பெயர் :சோ.கோகுல்
முகவரி :சங்கத்தானை, சாவகச்சேரி.



### ஐந்தாவது அகவையில்



பெயர் :ப.அபிசாந்
முகவரி : வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.

### ஐந்தாவது அகவையில்

பெயர் : சா.சஜீதன்
முகவரி : கரவெட்டி.



### ஆறாவது அகவையில்



பெயர் :சி.அர்ச்சனா
முகவரி : சின்னப்புதுக்குளம், வவுனியா.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



--------------------
பெற்றார் ஒப்பம்

# இலக்கியச்சோலை

## அம்மா அழாதே

குறுநாவல்

ரவி அருணாசலம்

பகுதி 6



அம்மா நிறைந்த ஆண் சகோதரங்களுக்கு ஒரு பெண். மூத்தமாமா, ஆசைமாமா, சிங்கப்பூர் மாமா, நாணோயா மாமா, மடத்தடி மாமா இவர்கள் அம் மாவை 'தங்கச்சி' என அழைத்தனர். சின்னமாமா 'அக்கா' எனக் கூப்பிட்டார். சிங்கப்பூர் மாமாவை நான் கண்டதில்லை. சிங்கப்பூரிலேயே இருந்து இறந்தும் போய்விட்டார். இரண்டு விசயங்கள்தான் சிங்கப்பூர் மாமாவை எனக்கு ஞாபகப்படுத்துவன. கீரிமலை கேணியடிப்பிள்ளையார் கோயிலின் மணிக்கோபுரம் அவர் கட்டுவிச்சது. 'சுப்பிரமணியம்' என்று அதில் அவர் பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். மற்றது அக் காவின் சங்கிலியிலுள்ள வடிவான பென்ரன். அக்கா பிறந்தபோது சிங்கப்பூரிலிருந்து அனுப்பியிருந்தார். அவரும் எனக்கு ஓரவஞ்சகம் செய்திருக்கமாட்டார். அவர் நல்ல வராம்... பெரியய்யா, நாணோயா மாமா, சிங்கப்பூர் மாமா மாதிரி நல்லவையள்தானே வேளைக் குச் செத்துப்போகினம். எனக்கு வடிவான பென்ரன் கிடைக்காமலே போச்சுது.

அம்மா கலியாணம் முடிக்க முந்தி எல்லா மாமா மாருக்கும் கவுணாவத்தை வேள்விக்கு ருசியா இறைச்சி சமைச்சா. கள்ளுக்குடித்த மாமாமாரின் நாக்குக்குப் பதமா, உறைப்பா, மணமா இறைச்சி ஆக்கினா. சாப் பிட்டோரின் மூக்காலும், பிடரியாலும் நீர் வழிந்தது. நெற்றியில் முத்து முத்தாய் நீர் திரண்டது. மூக்கின் நுனியில் ஒரு பொட்டுத் தெறித்தது. நெஞ்சிலும், முதுகிலும் ஊறி ஊறி ஊத்திண்டது. சோளகம் என் றாலும் காற்றை விசிறிவிடும். இது கடற்கரை. கடற் காற்றை ஏசும் என்று சோளகத்திற்குப் பயம். 'கள்ளுத் தான் இப்பிடி வேர்வையா ஊத்திண்ணுது' என்று மடத் தடி மாமா நினைத்தார். ஆனால், அவருக்கும் ஒழுகி யது. ஆசைமாமாவுக்குத்தான் அதிகம் ஒழுகியது. அன்றைய வேள்வியில் அன்று ஆசைமாமா அங் கில்லை. அக்கதையை இனி நான் கூறுவேன்.

கிளிநொச்சி கல்மடுவில் ஆசைமாமா வேளாண்மை செய்தார் என்றேன். கவுணாவத்தை வேள்விக்கு ஒரு கிழமை முன்னர் வருவார் என்றேன். வேள்விக்கு முதல் நாள் கர்ணன் வீட்டில் விழா பார்த்து, விடிய முன்னம் கவுணாவத்தை வைரவர் கோயிலுக்குப் போய்விடுவார் என்றேன். வந்திறங்கும் கிடாய்களைப் பார்ப்பார் என்றும் சொன்னேன். அதன் பிறகு வீடு, வளவு, ஊர், உலகம் என்று கதை உலாவித் திரிந்தது. இப்போது தொடங்கின இடத்துக்கே வந்து நிற்கிறது.

இராத்திரி புளிச்ச கள்ளுக் குடிச்சது விடியற்புறத்தில் வயிற்றைக் குழப்பும். கோயிலின் மேற்குப்புறப் பற்றைக்குள் போவார். பாவட்டை இலை புடுங்கித் துடைப்பார். வந்து கட்டிநிற்கும் கிடாய்களைப் பார்ப்பார். எவ்வளவு றாத்தல் போகும், என்ன விலை போகும், இறைச்சி ருசியா இருக்குமோ, எலும் புதான் கூடவோ, முத்தலோ, இளசோ? இவையள் ஆர் ஆக்கள்? எவடம் எந்தப் பகுதியார், என்னசாதி, சண் டியன்மாரா, சாதுவா? ஒவ்வொரு கிடாயிடமும், அதைச் சுற்றி நிற்கும் ஆட்களிடமும் அவருக்கு அறியப் புதினங்கள் இருந்தன. கிடாயின் காது பிடித்துப்பார்ப்பார், கண்ணை விரித் துப் பார்ப்பார், கால் தொட்டுப்பார்ப்பார். கிடாயின் சாதகம் முழுவதையும் தன்னுள் எடுத்துக்கொள்வார். 'உனக்கேனய்யா தேவையில்லாத வேலை?' ஏச்சுவிழும். 'எப்பிடி? நல்லாப் போகுமோ?' கேள்வி வரும், ஏச்சுக்கு அஞ்சார். கேள்விக்கும் வஞ்சனை செய்யார்.

மேளச் சத்தம் கேட்கும். கர்ணனின் முதற்கிடாய் ஊர்வ லமா வரும். சிறிய வைரவர் கோயிலின் முன், அந்த ஆல மரவெளியின் கீழ் முதற்கிடாயின் தலை விழும். இரத்தம் சீறி அடிக் கும். கால் துடிதுடிக்கச் சரி யும். ஓங்கிய வாளின் மேல் சூரியன் பட்டுத் தெறிக்காத காலை அது. சூரியன்பட்டுத் தெறிக்கும் முன்னரே ஆயி ரக்கணக்கான கிடாய்களின் இரத்தத்தை அந்த வாள் கண்டுவிடும். இரத்த வெள்ளத்துள் கிடாய் வெட்டுவோனின் கால்கள் இருக்க, இரத்தச் சேற்றினுள் கிடாய் பிடிப்போனின் கால்கள் இருந்தன. கால் துடிதுடித்து அடங்கிய கிடாய்கள், சுற்றிவரவுள்ள பனந்தோப்புகளுக்குள்போகும். இன்னொரு புறத்தில் குரக்கன் கதிர்கள் அறுபடுவது போல், சாவல்களின் தலைகள் கொய்யப்பட்டன.

சாவல்கள் விலை பேசப்பட்டன அல்ல. கொண்டுவந்து கொய்யவிட்டவரே கொண்டுபோனார். கிடாய்கள் பனந்தோப்பு களுக்குள் விலை பேசப்பட்டன. ஆசைமாமா இப்போ உசாராய் விடுவார். 'எவ்வளவு?'

'ஒன்பது பவுண். ஒரு சதம் குறையாது'

'ஆறு பவுணுக்குத் தருவியோ?'

'ஆறு பவுணுக்கு உங்கினேக்கை தவ்வல்கள் இருக் கும் போய்ப்பார்' 'பார்க்கத் தெரியாமலே உன்னட்டை வாறன். ஏலுமெண்டால் சொல்லு. இல்லாட்டில் விடு' இந்த இடத்திலை தான் ஆசைமாமா பிரசன்னமாவார். ஏழரைப் பவுணுக்கு இரண்டு பேருக்கும் நோகாமல் திருப்தி வரும்படி தீர்ப்பார். தன் மடிக் குள்ளும் இரண்டு பக்கத் தாலையும் சில்லறைகள் செருகுவார். ஆயிரக்கணக்கான கிடாய்களில் வண்டில்கட்டி ஊருக்குப் போறவையும் உண்டு. பனை வடலிகளுக்குள் தீர்படுபவையும் உண்டு. தீர்பட்டவை சைக்கிள் கரியரில் ஒழுங்கை நீட்டுக்கு இரத்தம் ஒழுகிப்போகும். அயற்கிராமம் அனைத்தும் அன்று பெருவிருந்துண்ணும்.

விருந்துண்ண வேளாண்மை விட்டுவந்த ஆசை மாமா வுக்கோ அன்று விருந்துண்ண முடியாதுபோகும். மடியில் சேரும் சில்லறை அன்றைக்கல்ல, இன்னும் இரண்டு மாசத் துக்குக் கள்ளுக்குப்போதும் போதுமாய் இருந்தது. பதினொரு மணிக்கு இடம்விட்டு வெளிக்கிடுவார். 'தங்கச்சி நல்லகறி செய்துவைச்சிருப்பாள். ஒரு முழுக்குப்போட்டு, நல்ல பிடிபிடிக்க வேணும்' என்று நினைப்பார். மனசு கள்ளுப் பக்கம் அருட்டும். 'கள்ளு எப்பவும் கிடைக்கும். கவுணாவத்தை வேள்வி இண் டைக்கு ஒரு நாளைக்குத்தானே? இதை அனுபவிக்க வேணும்' மனசு உடனே மறுதலிக்கும். கால்கள் காசி யரின் கொட்டில் பக்கம் தன்ரைபாட்டிலை திரும்பும். அது வெறியேறி வேலிவழிய புரள்வதற்கல்ல,' கொஞ் சம் குடிச்சால் நல்லாத் தின்னலாம். திண்டிட்டு படுத் தொழும்பி, பின்னேரமும் கள்ளடிக்க இரவைக்கும் நல்லாத் தின்னலாம். காசிருக்குத்தானே? நாளைக்கு வேணுமெண்டால் நல்லாக் குடிக்கிறது.'

காசியரிடம் குதம் குதமாய் கள்ளிருக்கும். பனங் குற்றியில் இருக்க, பனந்தோப்பு நிழல் செய்யும். பிளா இருக்கும். அமைப்பில் தும்பில்லா பெருஞ்சிரட்டை இருக்கும். பனையோலை மணத்துடன் பிளாவில் குடிக்கலாம். தெளிந்த நீராய் சிரட்டையில் குடிக்கலாம். குடிச்சுக் குடிச்சுக் கதைபேச அன்று நிறையப் புதி னங்கள் இருந்தன. நிறையச் சுருட்டுக்கள் இருந்தன. ஆசைமாமா அன்று நிறையச் சாப்பிடுவ தற்காக ஒரு சிரட்டை தான் வாங்கினார். காசியருக்கு அது ஆச் சரியமாய் இருந்தது. மடிக்குள் நிறையச் சில்ல றைகளையும் கண்டார். வந்த கிடாய்கள், போன விலை கள், அடைந்த இலாபங்கள், இழந்த நட்டங்கள் எல் லாவற்றையும் எல்லாரும் கதைத்தார்கள். இந்த முறை கள்ளு என்று மில்லாதவாறு ருசியாய் இருக்கிறது அதிகம் ஊறுகிறது என்றும் கதைத்தார்கள். பாளைக் கத்தி பற்றி, தளைநார் பற்றி, கத்திக்கூடுபற்றி, பனை பற்றி, பனங்கள்ளுக்கும் தென்னங்கள்ளுக்கும் உள்ள வேறுபாடு பற்றி, தியாகராச பாகவதருக்கும் சிவாஜிக் கும் உள்ள வித்தியாசம் பற்றி, கனகநாயகி பற்றி எல்லாம் கதைத்தார்கள்.

ஆசைமாமாவை ஒழும்ப விடவில்லை. ஆசை மாமா வுக்கும் ஒரு சிரட்டை ஏத்தவில்லை. இது பசிக்கப் பண்ணாது. நல்லாச் சாப்பிடப்பண்ணாது.

*(தொடரும்)*

## நூல் அகம்



இலங்கையில் நிகழ்ந்த ஒடுக்கு முறைகளாலும், நீடித்த போரினாலும் இந்த மண்ணை விட்டுச்சென்ற புலம்பெயர்ந்தவர்களில் ஒருவரான, கடந்த பதினெட்டு வருடங்களாகக் காணாதிருந்த மகனைக் காண்ப தற்கும், வேறுபல காரணங்களுக் காகவும் லண்டன் சென்று மீண்ட பயணத்தை மூத்தபடைப்பாளி சொக் கன் 'அக்கரைச் சீமையின் அனுப வங்கள்' என்ற நூலின் மூலம் பயணக் கட்டுரைகளாக வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த நூலுக்குப் பேராசிரியர் சபா.ஜெயராசா அணிந்துரையை வழங்கியுள்ளார். அவர் அணிந்துரை யில் மதிப்பீட்டுச் சுற்றுலா இலக்கியம் வளர்வதற்குரிய பலத்தையும், களத்தையும் ஆக்கித்தருவதில் மூதறி ஞர் சொக்கனின் பங்களிப்பு இந்நூல் வாயிலாக வெளிப்படுகின்றது" என்று குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மக்களின் கிராமப்புற வாழ்க்கை நிலையையும், அவர்களது வாழ்க்கைமுறைகளையும் அனுபவித்த நூலாசிரியர், நவநாகரிகத்தின் உச்ச நிலையிலிருக்கும் லண்டன் தனக்கு ஏற்றவாறு அமை யுமோ என்ற ஆதங்கத்தோடு சென்றவர், அங்கு சென் றபின்தான் தனக்கு ஏற்றவாறு லண்டன் அமைந் திருப்பதைக் கட்டுரைகளில் பல இடங்களில் மகிழ்ச்சி யுடன் தெரிவிக்கின்றார்.

'வழியிலே காரை நிறுத்துகிறான் மகன். வெளித் தோற்றத்தில் வீடுகள் ஒன்றுபோலவே ஒரு கட்டத்தில் ஒரு காட்சி தந்த ஒரு கட்டடத்தின் கதவைத் திறக் கிறான். உட்செல்கிறோம். மலையாளிகள் நடத்தும் சைவ உணவு விடுதியாம். மசாலாத்தோசை, இட்லி, வடை என்று கட்டளையிடச் சில நிமிடங்களில் கட தாசித் தட்டுக்களிலே அவை வருகின்றன..." என்று குறிப்பிடும் அவர், கொழும்பு 'கிறீன்லண்ட்' ஹோட் டலை நினைவுபடுத்துகிறார்.

புலம்பெயர்ந்த மக்கள் தமது கலாசாரங்களை வழுவவிடாது, அங்கு எமது கலாசாரத்தைப் பிரதிப லிக்கக் கூடியதாகக் கோவில் அமைத்தல், பாடசாலை பழைய மாணவர் மன்றங்கள், கலைவிழாக்கள் என்ப வற்றில் ஆர்வமும், அக்கறையும் கொண்டிருப்பதாகத் தனது பயணக் கட்டுரைமூலம் தெளிவுபடுத்துகிறார்.

ஒக்ஸ்போட், கேம்பிரிச் பல்கலைக்கழகங்களை வெகுசுவாரஸ்யமாக எழுதியிருக்கிறார். கார்ல் மார்க் ஸின் கல்லறையைத் தரிசித்தபோது "என்றும் நினை யாத முன்வந்து நிற்பினும் நிற்கும்" என்ற ஔவை வாக்கு நான் லண்டனில் தங்கியிருந்த காலத்தில் கார்ல் மார்க்ஸின் கல்லறையைக் கண்டதன்மூலம் நிதர்சன உண்மையானது ஒரு மறக்கமுடியாத அனு பவம் என்கிறார் ஆசிரியர். புலம்பெயர் சுற்றுலா இலக் கியங்களுக்குச் சொக்கனின் இந்நூல் ஒரு வழிகாட்டி யாகும்.

**மணிசேகரம்.**

## பலியிடல் அல்லது பலியாடுகள்

மீட்பானை நோக்கி நீள்கிறது
வெள்ளாடுகளின் கரங்கள்
சபிக்கப்பட்டுபோன அவைகளின் காலம்
புதைகுழிக்குப் போகும் பாதை வழியாகவே
அவைகளிடம் வந்து சேர்ந்திருக்கிறது.

எட்டுத் திசைகளுக்கும் வேதனையை
படர்வித்துக் கொண்டிருக்கிறது
அவைகளின் தலைகளின் மேல்
அழுத்தப்பட்ட முள் கிரீடங்கள்

அவைகளின் முன்னைய பாடல்கள்
சதைகள் அறுக்கப்பட்டு
குருதிகளும், அதன் வெடில்களாலும்
நிரப்பப்பட்டிருக்கிறது.
இப்போது அவை இரட்சிப்புப் பற்றிய
புதிய பாடல்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

கொடிய அரக்கனின் குகைக்குள்
அகப்பட்டுப் போன வெள்ளாடுகள்
தப்பித்துக் கொள்ளும் ஆதங்கமும்
அச்ச உறுத்தலும் கொண்டு
இரத்தம் பீசிறும்
குகையின் சுவர்களில் முட்டி மோதுகின்றன.

அரக்கன் கொடூர சிரிப்புடன், கையில் கோடரியுடன்
தனது இரட்சிப்புக் கடவுளை
பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறான்.
பலியிடத் தயாராக இங்கு வெள்ளாடுகள்
மீட்பானை நோக்கி கரங்களை நீட்டியபடி.

**தானா - விஷ்ணு.**

## நூல் அகம்



'வளர்பிறை' என்ற உளவியற் சஞ்சிகை கிடைக்கப் பெற்றுள்ளது. ஆனி- புரட்டாதி, ஐப்பசி-மார்கழி 2002 ஆண்டுக்கான இவ்விதழில் பல உள வியல் சம்பந்தமான கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

உளவியலாளர் வரிசையில் உள் ளத்தைப் பகுத்தாய்ந்த உளவியல் அறிஞர் சிக்மன்ட் புரொய்ட் பற்றிச் சஞ்சிகையின் ஆசிரியர் ச.எட்மன்ட் ரெஜிறோல்ட் அ.ம.தி. அவர்களால் எழுதப்பட்டுள்ளது.

சிக்மன்ட் புரொய்ட் உளப்பகுப்பாய்வு என்றும் உளமருத்துவச் சிகிச்சை முறையை உருவாக்கிய தன் மூலம் - உளவியல், உளவளத்துணை, உள மருத்துவத்துறை என்பன பரந்துவளரப் பாடுபட்டவர் என்று குறிப்பிடுகிறார்.

'உணர்வுகளின் அவசியமும், அதனைக் கைமாறும் வழிவகையும்' என்ற தலைப்பில் உளவளத்துணை யாளர் யோ.சர்வேஸ்வரி எழுதிய கட்டுரையில் "நாம் வளர்ந்தும்கூட உணர்வுகளைக் கையாளத் தெரி யாமல் எமக்குள் அடக்கிவிடுகின்றோம். இதனால், சில உடல் நோய்களுக்கு ஆளாகின்றோம். மார்புவலி, ஆஸ்மா, இதயநோய், வயிற்றுப்புண், எக்சிமா, புற்று நோய் போன்ற வியாதிகள் ஏற்படலாம் என்று குறிப் பிடுகிறார்.

மற்றும் டாக்டர் முருகானந்தன், மா.பரமேஸ்வரன் ஆகியோரின் ஆக்கங்களோடு இவ்விதழ் வெளிவந் துள்ளது.

உளவியல் சம்பந்தமான ஆக்கங்களை வளர்பிறை எதிர்பார்க்கின்றது.

**மகரம்.**

# கிழக்கும் மேற்கும்

## சிறுத்தொண்டர் நாயனார் – அமிஸ் எட் அமிலஸ்




ஏறத்தாழ எழுபதுமுதல் எண்பது வரையுள்ள
குறுங்காப்பியப் பாடல்களின் தொகுப்பே
பிரெஞ்சு மொழிக் காப்பியம் "சாண்சன்ஸ்–டி–கெஸ்டி!"
இத்தொகுப் பினிலுள்ள பாடல் களினைப்
பிரான்ஸின் வடக்குப் பகுதியில் உள்ள
"தூரோவெர்ஸ்" எனும் பாணர் மரபினரும்
தென்பகுதியில் உள்ள "தூரோபதர்" என்னும்
பாணர் மரபினருமே பாடினர் என்று
கருதிய போதிலும் – பாடியோர் பெயர்கள்
யாரும் அறிந்திடாவிக் காப்பியம் தன்னை
மூன்று பிரிவினுள் அடக்குவர் அறிஞர்கள்!
இதன் முதற்பாகம் பிரான்சு நாட்டில்
நடந்து முடிந்ததோர் போராட்டம் பற்றியது!
இரண்டாம் பாகம் பிரிட்டனின் தொகுப்பு!
இதிற் குறிப்பிடத் தக்கது "கிறிஸ்டியன்–டி–டிராய்ஸ்!!"
பிரிட்டனின் அரசனாம் ஆர்தர் பற்றியும்
அவ்வரசனின் வட்டமேஜை வீரத் திருத்தகையர்
பன்னிருவர் பற்றியும் மொழிகின்ற பாகமது!
குறுங்காப் பியங்களில் இரண்டாம் தொகுதியில்
இணைக்கப்பட்டுள்ள "அமிஸ் – எட்–அமிலஸ்" எனுமிது
குடும்ப உறவுபற்றி விரித்திடும் காப்பியம்!
"அமிஸ" "அமிலஸ" எனுமிரு வீரத்திருத்தகையரின்
வாழ்க்கை பற்றியதே இக்குறுங் காப்பியம்!
"அமிஸ்" என்பவரும் "அமிலஸ்" என்பவரும்
வெவ்வேறு இடங்களில் – ஒரே நாளிலே
பிறந்தவர் என்பதுடன் இவர்கள் இருவருக்கும்
ஒரே நாளில்தான் ஞானஸ் நானமும்!
தோற்றத்திலும் ஒற்றுமை மிக்க இவ்விருவரும்
அரசனான "சார்லி மேகின்" என்பவனால்
வீரத் திருத்தகைய ராக்கப் பெற்றனர்!
அந்த நல்ல வேளையிற் தானிவ் விருவரும்
ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டனர்!
தம்மிடையே உள்ள உருவ ஒற்றுமையைக்
கண்டுள்ளம் மகிழ்ந்து நெருங்கிய நட்புக்
கொண்டுள்ளம் வியந்து நட்பில் இணைந்தனர்!
மன்னன் "சார்லி மேகின்" தன் இளவரசியான
"பெல்லி செண்டை" அமிலஸுக்குக் கொடுத்திட
விருப்பம் கொண்டதை அறிந்தான் "கார்டர்!"

(தொடரும்)

# தட்டிக் கெ(ா)டுப்பா? தண்டிப் பிழைப்பா?




"தம்பி வானவன்! இந்தாருங்கள்! உங்களுக்குத்தான் புத்தாண்டுக் கலைவிழாத் துண்டுப்பிரசுரம் முன்னம் முன்னம் தரப்போகிறேன்" என்றார் விழா அமைப்பாளர். "நல்லது ஐயா! வாருங்கள்! உட்காருங்கள்!" என்று அவரை அமரவைத்து, அவர் நீட்டிய துண்டுப்பிரசுரத்தை நோட்டம் விட்ட வானவன் திடுக்கிட்டான். "ஐயா என்ன இது? 'வாத்தியவாரிதி' வானவன் என்று பட்டம் சூட்டியுள்ளீர்கள்?" எனச் சினந்தான். "ஆம் தம்பி 'கலைப்பேரொளி' காசிலிங்கம்தான் என்னை அழைத்து இப்படி உங்களுக்குப் பட்டம் போட்டு அடிக்கச்சொன்னார். உங்களை இன்று மாலை வந்து சந்திக்கட்டாம்." "என்ன? மாலி போன்ற புல்லாங்குழல் மாமேதைகளுக்குக்கூட இல்லாத பட்டம் வெறுங் கற்றுக்குட்டியான எனக்கா? ஐயா! இப்படி இளங்கலைஞர் பலரைப் பெரும் பட்டங்கள் சூட்டி அவர்களை மண்டைக் கனங்கொண்டு வளர்ச்சிகெட்டுக் குட்டிச்சுவராக வைத்து வருகிறார் காசிலிங்கம். வெறும் பட்டங்களைச் சுமக்கும் பதர்கள் என்று ஈழத்தின் கலைஞர்களை உலகம் பழிக்க அடித்தளமிடுகிறார். இந்தக் கலைச்சீரழிப்புக்குத் துணைபோக என்னால் முடியாது. ஐயா, அனைத்துத் துண்டுப் பிரசுரங்களிலும் என் பட்டத்தை முற்றாக அழித்துவிடுங்கள்" என்று வேண்டிக்கொண்டவன், அவரை அனுப்பிவிட்டுக் கலைப்பேரொளி வீட்டிற்கு விரைந்தான். சாய்மனைக்கட்டிலில் படுத்துக்கிடந்த கலைப்பேரொளி- வாசலில் வானவனைக் கண்டதும் துள்ளியெழுந்து உட்காந்தார் மிகுந்த உற்சாகத்தோடு. "வாடா வா! வானவனா வா!" என்றார். "என்னடா குஞ்சு? நோட்டீஸ் பார்த்தாயா? என்ன ஜோரான பட்டத்தை உனக்குச் சூட்டியிருக்கிறேன். சரி! ஐயாயிரமா, பத்தாயிரமா கொண்டு வந்திருக்கிறாய்?" என்று குழைந்து குசுகுசுத்தார். "என்னை நையாண்டி செய்யும் உள்நோக்கோடு, பெரியபட்டத்தை என்பெயருக்கு முன்னால் போடுவித்த குற்றச்சாட்டில், மானநட்டங்கோரி உங்கள் மீது மானநட்ட வழக்குப்போடப்போகிறேன்" வனாவன் ஆத்திரத்தோடு திரும்பிச்செல்ல, கலைப்பேரொளி அதிர்ச்சியுற்றுச் சிலையாக நின்றார்.

**பஞ்சாட்சரம் கதைகள் 8**

# A-9 ஐ நீளும் நினைவுகள்

பகுதி இருபத்தொன்பது

சமர் தொடங்கிய ஓரிரு நாட்களுள்
சரிந்து போனது சுற்றுலா விடுதி;... ஏன்...
நிமிர்ந்து நின்ற 'பல அரண்'... சிலவும் அச்
'சிறையுடைப்பிலே' சிக்கிச் சிதறிற்று.
எமனின் வாகனம் நடந்து திரிந்தது.
ஈனக்குரல்கள் எழுந்து அடங்கின.
"அமர்க்களம் தொடர்ந்தால் 'முழுவதும்'
அழியும்" அரசு சுதாரித்துக் கொண்டது.

உப்பளத்தினை அண்டிய ஏ-9
உருக்குலைந்தது 'பசிலன்' கணைகளால்.
தப்ப வழியின்றிப் பதுங்கு குழிகளுட்
சமாதியாவதோ என்றசா அச்சத்தில்
எப்படியேனும் முகாமினைக் காத்திட
இறுதி வரைக்கும் முயன்ற படைகட்கு...
துப்பியே குண்டைத் தூவும் விமானங்கள் துணிவையும்,
உணவோடள்ளி வீசின.

இழப்புகள் குருதிபோலே பெருகவும்,
எழுந்து காற்றை அரணாக கொண்ட நம்
இளைய வீரர்கள் தொடர்ந்து பொருதினர்.
இறைந்து கிடந்த பொறிவெடி, மிதிவெடி,
பொழியுங் கணைகளைத் தாண்டிக் கடந்தனர்.
பொட்டல் வெளியொடும், சுட்ட வெயிலொடும்.
களைப்பிலாதுமே மோதினர். காயங்கள்
கண்டனர்; பலர் 'களவிதை' யாகினர்.



# பாலையும் சோலையும்

## கலாநிதி சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்



எனது காதல் விக்கினம் எதுவுமின்றி நிறைவேறுவதற்கு உதவ நடராசா முன்வந்தான். அவனது ஆலோசனையின் முதற்திட்டமாகக் குறித்த பெண்களின் தம்பியோடு நெருங்கிய நட்புப் பூண்டோம். (அவன் ஸ்ரான்லியில் ஒன்பதாம் வகுப்பு மாணவன்) அக்காலத்தில் நான் சிறுவர் சிலருக்கு 'ரியூசன்' கொடுத்துப் பெற்ற பணத்தில் பெரும்பகுதி அவனைக் கைக்குள்போடச் செலவாயிற்று. அவனைச் சந்திப்பதைச் சாட்டாகக்கொண்டு அவன் வீட்டுக்கு அடிக்கடி 'விஜயம்' செய்தோம்! சிறிது சிறிதாக அவர்களின் வீட்டு உறுப்பினர்கள்போலவே ஆகிவிட்டோம். பெண்களும், தாயும் எங்களின் வருகையில் மகிழ்வதுபோலவும் தோற்றியது. சிறப்பாக மூத்தபெண் எங்களோடு கலகலப்பாக உரையாடுவதை விரும்பினார். ஆனால், என் காதலுக்குரியவரோ பெரும்பாலும் மௌனத்தைக் கவசமாகப் பூண்டதால், அவரை வழிக்குக் கொண்டு வருவது எவ்வாறு என்ற ஆராய்ச்சியிலே நானும், நடராசாவும் பெரிதும் ஈடுபட்டோம். எனது பொறுமை சிறிது சிறிதாகக் கலைய....

நான் துணிந்துவிட்டேன். நடராசாவுக்குக்கூடச் சொல்லாமல் என் உணர்ச்சிகளையெல்லாம் கொட்டிக் கடிதம் எழுதினேன். காதல் கடிதம்!

அதனை எழுதும்வரை இருந்த துணிவு நேரடியாகக் கொடுக்க எண்ணியபொழுது காற்றாய்ப் பறந்துவிட்டது. என்ன செய்யலாம்?

கலகலப்பாய் எங்களோடு உரையாடும் மூத்த பெண்ணைத் தூதாக்கி, அவர் மூலம் கடிதத்தை என் காதலிக்குச் சமர்ப்பிக்க முடிவுசெய்தேன். "எங்கள் இருவரையும் இணைத்து வைப்பது உமது பொறுப்பு" என்று கூறிக் கடிதத்தோடு பொறுப்பையும் அவரிடம் கையளித்தேன்.

ஆனால்.... நடந்ததோ வேறு.

அவர் கடிதத்தைத் தங்கையிடம் சேர்க்காது தமது காதல் கோரிக்கையை முன்வைத்தாரே பார்க்கலாம்!

'அன்று விட்டேன் கொண்டலடி'

இந்தக் காதல் விபத்து இடம்பெற்றது என் பதினேழாம் வயதில். இதற்குப் பிறகு நான் திருமணம் செய்துகொண்ட இருபத்தேழாம் வயதுவரை காதலுக்குக் கடிவாளமிட்டு, என்னைக் கட்டுப் படுத்திக் கொண்டேன்.

திருமணத்தின் பின் என் மனைவியே எல்லாமாகி என் காதலை மட்டுமன்றி, கவலையையும் சுமக்கும் சுமைதாங்கியானார். இன்று நான் 35 வயதிலிருந்து 45 வயதான எட்டுப் பிள்ளைகளின் தந்தை. பேரர், பேர்த்தியராய் எண்மர் உள்ளனர்.

எனது காதல் அனுபவம் ஓர் இடைப்பிறவரல் மட்டுமே. இது பற்றி எனது சுயசரிதையில் விரிவான ஓர் அத்தியாயமே உண்டு.

அதனை இவ்வளவோடு நிறுத்தி, நான் முதன்முதல் ஆசிரியரான விமரிசை பற்றி இனிக் கூறுவேன்.

1961 இல் பாடசாலைகள் தேசியமயமாயின. கிறிஸ்தவ கத்தோலிக்க கல்லூரிகள் சில மட்டும் தமது மத தனித்துவத்தைப் பேண எண்ணி, தமது நிறுவனங்களை அரசுடைமைகளாக்குவதை ஏற்காது தனித்திருந்தன.

தேசிய உடைமைகள் ஆக்கப்பட்ட பாடசாலைகளால் ஏற்பட்ட நற்பயன்கள் மிகப்பலவாகும். பாடசாலைக் கட்டணம், அபிவிருத்திநிதி என்று பெருந்தொகைப் பணத்தை அறவிடும்முறை நீக்கியமை. (இன்று பாடசாலைச் சேர்வனுமதி என்றும், கட்டட விரிவாக்கம் அது இது என்றும் பல்லாயிரக் கணக்கில் நிதி சேர்ப்பது மீண்டும் அரசுப் பாடசாலைகளிலும் வழக்கமாகி விட்டது. இதனால், இலவசக்கல்வி அர்த்தமற்றதாகிவிட்டது). எல்லா மத மாணவர்களும் தத்தம் மதக் கல்வியைப்பெற வாய்ப்பு ஏற்பட்டமை, ஏழை மாணவர்களும் பாடசாலை சென்று சமத்துவமாய் அமர்ந்து கல்வியைப் பெற வாய்ப்புண்டானமை என்பனவே அந்த நற்பயன்கள்.

ஆனால், 1950 களில் நிலைமையே வேறு. அரசு நேரடியாக நிர்வகித்த பாடசாலைகள், சமய சபைகள் (கத்தோலிக்க திருச்சபை, கிறிஸ்தவ திருச்சபைகள், சைவ வித்தியா விருத்திச் சங்கம், இந்துக் கல்லூரிச் சபை என்பன எடுத்துக்காட்டுகள்.) தனியார் நிர்வகித்த பாடசாலைகள் என மூன்று வகையான பாடசாலைகள் அன்று இருந்தன.

(தொடரும்)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## பெருந்தள வீழ்ச்சியும் தமிழர் எழுச்சியும்!

பல ஆண்டுகளாகத் தமிழர் பிரதேசத்தின் மிகப்பெரும் தடைமுகாமாகவும் - யாழ்.குடாநாட்டையும், வன்னிப் பெருநிலப்பரப்பையும் பிரித்துநின்ற மையமாகவும் விளங்கிய ஆனையிறவு இராணுவத்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததன் மூன்றாவது ஆண்டு வெற்றிவிழா இன்று - என்றுமில்லாத உணர்வெழுச்சியுடன் கொண்டாடப்படுகின்றது.

ஆனையிறவு இராணுவத்தளம் - தனியே ஒரு இராணுவ முகாமாக மட்டுமல்லாது - தமிழர் பகுதியில் இராணுவ ஆக்கிரமிப்பின் சின்னமாகவுமே விளங்கியது.

போரியல் தந்திரோபாயத்தில் மிக முக்கியமானதொரு தளமான ஆனையிறவு படைமுகாம் - முதலில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆகாய, கடல், வெளிச் சமரில் இலக்காகியது.

விடுதலைப் புலிகளால் - பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது படைநடவடிக்கையான ஆகாய, கடல், வெளிச்சமரில் - பெரும் எத்தனத்துடன் படைத்தளத்தை நிர்மூலமாக்க விடுதலைப் புலிகள் முயன்றபோதும் அது கைகூடவில்லை.

இச்சமரின் பின்னர் - ஆனையிறவு படைத்தளம் மேலும் பலப்படுத்தப்பட்டதோடு - அதன் விஸ்தீரணமும் விரிவாக்கம் கண்டது.

யாழ்.குடாநாட்டுடனான தரைவழிப்பாதையைத் தம்வசம் வைத்திருந்ததன் மூலம் - விடுதலைப் புலிகளின் நகர்வையும் மட்டுப்படுத்திவிட்டதாகவே இராணுவம் ஆதாயங்கண்டு வந்தது.

'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து - விடுதலைப் புலிகள் யாழ்.குடாநாட்டிலிருந்து, வன்னிப் பெருநிலப்பரப்புக்கு பின்னகர்ந்தபோதும் - ஆனையிறவுத்தளம் மாத்திரம் இல்லாதிருக்குமானால் - யாழ்.குடாநாடு மீதான இராணுவ நடவடிக்கைகள் இந்தளவு முன்னேற்றம் கண்டிருக்குமா என்பதே சந்தேகமாயிருக்கும் என்பது போரியியலாளர்களின் கணிப்பாகும்.

இந்தவகையில் - குடாநாட்டை விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும் - பின்னர் வெளியேறி வன்னிக்குச் சென்றபோதும் - ஆனையிறவுப் படைத்தளம் - இராணுவநோக்கில், படையினருக்கு மிகப்பெரும் வாய்ப்பையே அள்ளித்தந்தது.

தொடர்ந்து வவுனியாவிலிருந்து 'ஜயசிக்குறு' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது - ஆனையிறவிலிருந்து பெரும் இராணுவ நகர்வை 'சத்ஜய' நடவடிக்கை மூலம் தொடங்கவும் ஆனையிறவுப் படைத்தளமே அத்திவாரமானது.

பரந்தன், முரசுமோட்டை எனப் பரந்து - கிளிநொச்சி நகரையும் கைப்பற்றி - இராணுவ வெற்றிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வலுமிகுந்த பின்தளமாக, விநியோக மையமாக - முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்ட படையினருக்கு ஆனையிறவுத் தளம் வழங்கிய பேருதவிகள் அளப்பரியன.

தனியே தரைவழியே என்று மட்டுமில்லாது - கிளாலிக் கடனீரேரியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டதைச் சுருக்கிக்கொள்வதில் ஆனையிறவுத் தளம் - வலுவான கண்காணிப்பு நிலையமாகவும் இருந்தது.

இவ்வாறு - வடபுலத்தில் இராணுவ நடவடிக்கைகளிலும், படையினரின் முன்னேற்ற முயற்சிகளிலும், கண்காணிப்புச் செயற்பாடுகளிலும் - கேந்திர ஸ்தானமாகப் பங்கேற்று வந்த ஆனையிறவுத் தளத்தின் மீது - விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வீரியமிக்க, துணிகரமான, அதிநுட்பமிக்க தாக்குதல் - அத்தளத்தை வீழ்ச்சியுறச் செய்தபோதே - தமிழர் விடுதலைப் போராட்டத்தின் சக்கரங்களை நகரவிடாது தடுத்திருந்த முட்டுக்கட்டையொன்று நீங்கியதான பூரிப்பு தமிழர் மனதில் ஏற்பட்டது.

ஆனையிறவுத்தளத்தை வெற்றிகொள்வதில் விடுதலைப் புலிகள் கையாண்ட தாக்குதல் வழிமுறைகள், துணிச்சல் மிக்க தரையிறக்கம், உடலையே காப்பரணாக்கிப் போராடி உயிர்கொண்டு படையினர் நகர்வைத் தடுத்த தியாகம், மிகுந்த மதிநுட்பமான ஊடுருவல்கள் - துண்டிப்புக்கள் என, விடுதலைப் புலிகளின் போராற்றலை உலகமே வியந்து நோக்கியது.

அனுபவமிக்க போரியல் நிபுணர்கள் ஆச்சரியப்பட, ஆனையிறவுத்தள வெற்றியை தமிழர்க்குத் தந்த - அற்புதமான தலைவனின் ஆற்றல்மிகுந்த வழிகாட்டல் - இராணுவ ரீதியில் மட்டுமல்லாது, அரசியல் ரீதியிலும் தமிழர் போராட்டத்தை - இன்னொரு பரிமாணத்திற்குள் உந்தித் தள்ளியது. விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை மீளக்கைப்பற்றி விடுவார்களோ என்ற அச்சத்தில் அயல்நாடெடுத்த அரசியல் நகர்வும் - இராணுவம் தீச்சுவாலையாகி தீவிர வெம்மை காட்டிய எதிர்ப்பு நடவடிக்கையும் - விடுதலைப் புலிகளின் தீரமிகுந்த போருக்கும், இராஜதந்திர அரசியல் நகர்வுகளுக்கும் முன்னால் செய்வதறியாது திகைத்தன.

விடுதலைப் புலிகள் எதனையும் சாதித்துவிடக்கூடியவர்கள் என்ற பலத்தின்பாற்பட்ட, அடித்துச் சொன்ன அறிவிப்பு - தெற்கில் அரசாங்க மாற்றத்தையும், சமாதானமாகித் தீர்க்கலாம் வாருங்கள் என்ற அறிவிப்பையும் கொண்டுவந்ததும் - ஆனையிறவுத்தள வெற்றி தந்த விளைவுகளே.

இந்தவகையில் தமிழர் வரலாற்றில் இராணுவ, அரசியல் முக்கியத்துவத்தைத் தன்னகத்தே கொண்ட ஒரு பெரு வெற்றியை இன்று பூரிப்புடன் தமிழினம் கொண்டாடும் வேளையில் - இந்த வெற்றிக்குக் காலாக நின்ற தலைவனையும், தளபதிகளையும், போராளிகளையும் நெஞ்சுநிறைய வாழ்த்திக் கொண்டு -

இன்று பெருமிதங்கொண்டு தமிழினம் நிமிர்ந்துநிற்கக் காரணமாகி - எம்மினத்திற்காய் உயிர்தந்து விதையாகி வீழ்ந்த மாவீரர்கள் அனைவரையும் மனங்களில் நிறுத்தி அஞ்சலி செய்யவேண்டியது தமிழர் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

# புலிகள் காட்டிய நியாயங்களை எவரும் புறந்தள்ளிவிட முடியாது

## மட்டு.-திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக ஒதுங்கிக்கொள்வது தொடர்பாக அறிவித்திருப்பது, அவர்களின் நியாயங்களை அப்படியே காட்டுகிறது. எனவே, அவர்களின் நியாயங்களைப் புறந்தள்ளிவிடமுடியாது என மட்டக்களப்பு, திருகோணமலை மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நம்பிக்கை ஊட்டக்கூடிய விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கே உண்டு. அத்துடன், விடுதலைப் புலிகள் தற்காலிகமாக ஒதுங்கிக் கொள்வதாகத் தெரியப்படுத்தியிருக்கும் பேச்சுவார்த்தை தொடர்பாகத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அரசாங்கம் முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

இதற்கான உறுதிப்பாட்டைத் தெளிவாகத் தெரிவிப்பது முக்கியம். ஆகவே, பேச்சுவார்த்தைக்குத் தடையாகவுள்ள சூழ்நிலைகளை அகற்றி, நீதியான தீர்வுகாண்பதில் தங்களுக்குள்ள இதயசுத்தியான ஈடுபாட்டை அரசு வெளிப்படுத்த வேண்டும். அதேவேளை, விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சுக்களில் அனுசரணையாளராகவுள்ள நோர்வே அரசாங்கம், புலிகளை பேச்சுக்கு அழைக்க முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கன்காணிப்பில் இந்தியா; புலிகளின் சம்மதம் தேவை!

## போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அறிவிப்பு

கண்காணிப்புக்குழுவில் இந்தியாவையும் உள்ளடக்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் கூட்டாகக் கோரினாலும், விடுதலைப் புலிகள் சம்மதித்தாலேயே அவ்வாறு எதுவும் செய்ய முடியுமெனப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கண்காணிப்புக்குழு மேலும் தெரிவிக்கையில்-

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி உருவாக்கப்பட்ட கண்காணிப்புக்குழுவில் மாற்றங்களைச்செய்ய இரண்டு தரப்பினரதும் அனுமதி அவசியமானது. கண்காணிப்புக்குழுவின் தலைவர் மற்றும் உள்ளடங்கும் உறுப்பினர்கள் பற்றியதெரிவு நோர்வேயின் வசமிருக்கிறது. இதன்படி நோர்வே, ஐஸ்லாந்து, டென்மார்க், பின்லாந்து, சுவீடன் ஆகிய நோர்ட்டிக் நாடுகளைத் தவிர வேறெவரும் இதில் அங்கம்வகிக்க முடியாதெனவும் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

# தமிழ்க்கட்சிகளுடன் அரசு பேச வழிசெய்க!

## இந்திய அரசிடம் சுவாமி கோரிக்கை

சமாதானப் பேச்சுக்களிலிருந்து விடுதலைப் புலிகள் விலக முடிவுசெய்தால், இலங்கை அரசு ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்த அமெரிக்காவும், இந்தியாவும்- இலங்கை அரசு மீது அழுத்தம் கொடுக்க வேண்டும் என இந்திய ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

தமிழ்க்கட்சிகளுடன் பேசி, இந்திய சமஷ்டி அமைப்பு போன்றதோர் அமைப்பை இலங்கையில் உருவாக்கலாம் என்றும் அவர் கூறினார். விடுதலைப் புலிகள் வன்முறையாளர்கள் என அமெரிக்கா தெரிவித்த கருத்தையும் சுவாமி வரவேற்றுள்ளார்.

# தனியார் பாதுகாப்புச் சேவைகள்; ஒழுங்குபடுத்த அரசாங்கம் திட்டம்!

தனியார் பாதுகாப்புச் சேவைகளை ஒழுங்குபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. உள்துறை அமைச்சினூடாக அந்த ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தனியார் பாதுகாப்புச் சேவைகளைப் பயன்படுத்தி இடம் பெற்றுவரும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கே இந்த நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட தனியார் பாதுகாப்புச் சேவைகளே இனி இயங்க அனுமதிக்கப்படும். அத்துடன் பாதுகாப்புச் சேவைகளில் பணிபுரிவோருக்கும் ஒழுங்கான பயிற்சிகள் வழங்கப்படும்.

தற்போது நாடு முழுவதும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தனியார் பாதுகாப்புச் சேவைகள் இயங்குகின்ற போதிலும் 280 மட்டுமே பதிவுசெய்யப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சின் தகவல்களிலிருந்து தெரியவருகிறது.

# 600 மில்லியன் டொலர் முதலீட்டுடன் கொழும்பு திரும்பினார் கசினோ வர்த்தகர்!

## பிரேமதாஸ அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்டவர்

பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்னர் - ஆர்.பிரேமதாச ஜனாதிபதியாக இருந்தபோது, கசினோ சூதாட்ட விடுதிகள் அரசாங்கத்தினால் மூடப்பட்டபோது - இலங்கையை விட்டு வெளியேறிய ஜோசிம் என்ற பிரபல கசினோ வர்த்தகர் கொழும்பு திரும்பியுள்ளார்.

தாம் பல மில்லியன் டொலர் முதலீட்டுத் திட்டங்களுடன் திரும்பியுள்ளதாக ஜோசிம் தெரிவித்துள்ளார். இவர் அரசியல் செல்வாக்குடன் 1980 களில் கசினோ சூதாட்டத்தில் ஊழல்களைச் செய்ததாகக் குற்றச்சாட்டுக்கள் கிளம்பியிருந்தன.

கொழும்பு திரும்பியுள்ள இவர் 600 மில்லியன் டொலர் முதலீட்டை இலங்கையில் மேற்கொள்ளவுள்ளதாகவும், தற்போது நடைமுறையிலுள்ள சமாதானச் சூழல் முதலீட்டுக்கான நல்ல வாய்ப்பாக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இவரது திட்டத்தில் 350 ஏக்கர் நிலப்பரப்பில் களியாட்ட விடுதி ஒன்றை அமைப்பது முக்கியமானதாகவுள்ளது. திரையரங்கு, நீர்விளையாட்டு மைதானம் என்பவற்றை உள்ளடக்கி, அமைக்கப்படவுள்ள இந்தக் களியாட்ட விடுதியின் மூலம் 2000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மட்டக்களப்பு பாசிக்குடாவில் சுற்றுலா விடுதியொன்றை அமைக்கவும் ஜோசிம் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சி கடற்பரப்பில் மீண்டும் நேரக் கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பிரதேசத்தில் கடற்தொழிலில் ஈடுபடுவதற்குப் படைத்தரப்பு நேரக்கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக, மணற்காட்டுப் பிரதேச மக்கள் - நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்திடம் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் காலை 7 மணிவரையும் கடற்தொழிலில் ஈடுபடமுடியும் எனவும், இங்கு பாஸ் நடைமுறை மீண்டும் பின்பற்றப்படுவதாகவும் மணற்காட்டு மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் இவ்விடயம் தொடர்பாகத் தாம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவைச் சந்தித்து எடுத்துரைப்பதாகத் தெரிவித்தார். (09)

# புலிகள் பேச்சுக்கு வரவேண்டும் என்பதே சர்வதேசத்தின் விருப்பம்!

## வெளிவிவகார அமைச்சர் கருத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் பங்குபற்ற வேண்டும் என்பதே உலக நாடுகளின் கருத்தாகும் என்று வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இன்றைய சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் பங்குபற்றுவது முக்கியமானதாகும்.

இயன்றளவில் விரைவில் விடுதலைப் புலிகளைச் சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் பங்குபற்றவைப்பதற்கு நோர்வே அரசாங்கம் உச்சக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அதன் தூதுவர் தமக்கு உறுதி கூறியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

# ஆனையிறவு வெற்றிச்சமரும்

**சுபத்ரா**

ஆனையிறவுப் பெருந்தளத்தினை விடுதலைப்புலிகள் வெற்றிகொண்டதன் மூன்றாவது ஆண்டு வெற்றிவிழாவும், ஆனையிறவை மீளக்கைப்பற்ற முனைந்த தீச்சுவாலை படைநகர்வை முறியடித்த இரண்டாவது ஆண்டு நிறைவு வீரவிழாவையும் விடுதலைப்புலிகள் இன்று பெருமெடுப்பில் கொண்டாடுகிறார்கள்.



இதுவரையில்லாதளவுக்குப் பெருவெற்றி விழாவாகப் பளையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த நிகழ்வில், விடுதலைப்புலிகளின் அனைத்துப் படையணிகளின் அணிவகுப்புகள், ஆயுதங்களின் கண்காட்சி, தாக்குதல் ஒத்திகை எனப் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் - பளையில் நடத்தப்படும் வெற்றிவிழாவின் அரசியல், இராணுவப் பரிமாணங்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் ஆனையிறவுத் தளவீழ்ச்சியுடன் ஆரம்பித்த அரசியல், இராணுவ ரீதியான மாற்றங்கள் - இன்று ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் வரை சென்றிருப்பதோடு, பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கங்களை அமுல் நடத்துவதற்காக இடைநிறுத்தும் அளவுவரை சென்றிருக்கின்றது.

இந்த மூன்றாண்டு அரசியல், இராணுவ வியூகங்களுக்குள் புலிகளின் நகர்வுகள் சர்வதேச அளவில் உன்னிப்பாக அவதானிக்கத்தக்கதாகவும், கடந்தகால ஒப்பீட்டுடன் வித்தியாசமானதாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

ரிவிரெசவில் ஆரம்பித்து சத்ஜய, ஜயசிக்குறு, ரணகோஷ என்று விடுதலைப் புலிகளை வன்னிக்குள்ளும் இருக்கவிடாது, ஓயாது இராணுவ நெருக்குவாரத்தைப் பொ.ஐ.மு அரசாங்கம் கொடுத்துக்கொண்டிருந்தது. போர்மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவது என்ற நோக்குடன் செயற்பட்ட ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கம், அகலக் கால்வைத்ததன் விளைவை 'ஓயாத அலைகள் -3' நடவடிக்கைமூலம் விடுதலைப் புலிகள் உணர்த்தத் தொடங்கினர்.

'போர் மூலம் சமாதானம்' என்ற கொள்கை - புலிகளாலும் பயன்படுத்தக் கூடியளவுக்கு எதிர்மாறான விளைவையே தோற்றுவித்தது. புலிகளைத் தோற்கடிக்க இந்தக் கொள்கையைப் பின்பற்றிய சந்திரிகா அரசாங்கத்தைத் தோற்கடித்து, சமாதானப் பாதைக்கு ஐ.தே.க அரசாங்கத்தை இழுத்துவரப் புலிகள் பயன்படுத்தியதும் இந்தப் 'போர் மூலம் சமாதானம்' என்ற கொள்கைதான்.

'போர் மூலம் சமாதானம்' என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் போர் மூலோபாயம் - இங்கே முறியடிப்புப் போர்த்திட்டமாக மறுபரிணாமம் பெற்றதை அனுபவத்தினூடாக அறிநதுகொள்ள முடிந்தது. இதற்கு வித்திட்டதில் ஆனையிறவுப் பெருந்தள வீழ்ச்சியும், தீச்சுவாலை முறியடிப்புச் சமரும் மிகமுக்கிய பங்கு வகித்துள்ளன.

# தீச்சுவாலை முறியடிப்புச் சமரும்



ஓயாத அலைகள் -3 படைநகர்வு கட்டம் கட்டமாக வன்னியின் தென்முனையிலுள்ள முக்கிய தளங்களை வீழ்த்திய பின்னர், வடமுனை நோக்கித் திசைதிருப்பப்பட்டது. மூன்று நூற்றாண்டுகால அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து ஆனையிறவை வெற்றி கொள்வதற்காகப் புலிகள் வகுத்த போர்த்திட்டங்கள்- போரியல் வல்லுநர்களைத் திகைக்க வைத்திருக்கின்றன.

. சாத்தியமாகாத நகர்வு என்ற நம்பப்பட்ட இடங்களில் நகர்வுகளை மேற்கொண்டது, புலிகளாலும் இவ்வாறு செய்யமுடியுமா எனக் கேள்வி எழுப்பப்பட்ட போரியற்செயற்பாடுகளை நிறைவேற்றிக்காட்டியது, எல்லாமே ஆனையிறவுத் தளத்தைப் புலிகள் வெற்றிகொள்ளக் காரணங்களாக அமைந்தன.

54 ஆவது டிவிசனின் கட்டளைப்பீடத்துடன், அதன் முழுப்பலத்தையும் - பக்கத்துணையாக 53 ஆவது டிவிசன், 55 ஆவது டிவிசன்களையும் கொண்டிருந்த ஆனையிறவுப் பெருந்தளத் தொகுதியைப் புலிகள் தமது வியூகத்துக்குள் சிக்கவைத்து வீழ்த்திய போர்த் திட்டம், இன்றுவரை போரியல் வல்லுநர்களுக்கு வியப்புக்குரியதாகவே இருந்து வருகின்றது.

புலிகள் அசைக்கமுடியாத சக்தியாகப் பரிணாமம் பெற்றுவிட்டார்கள் என்பதை இராணுவரீதியான தகைமையுடன் பார்க்கும் நிலையை, ஆனையிறவில் இவர்கள் பெற்ற வெற்றி ஏற்படுத்தியிருந்தது. ஆனையிறவின் வீழ்ச்சியின் பின்னர்தான் தென்பகுதி மக்களும், தாம் கட்டுண்டிருந்த மாயையிலிருந்து விடுபட முனைந்தனர்.

அதுவரை போர்க்குரல் எழுப்பி வந்தவர்கள்கூட, இனி அது சாத்தியப்படாது என்று எண்ணும் நிலைக்கு ஆனையிறவில் படையினர் கண்ட தோல்வி, அவர்களை இட்டுச் சென்றிருந்தது. ஆனையிறவைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தின்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களைத் தொடுத்திருந்தபோதும் - அர்சியல் ரீதியானதும், இராணுவரீதியானதுமான காரணங்களால் அந்தத் தாக்குதல்களைத் தொடரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட அரசாங்கமும், அதன் படைகளும் மீண்டும் போரியல் மேலாதிக்க நிலையைத் தக்கவைத்துக் கொள்ள முயன்றன. அதற்குத் தேவையான கணிசமான முயற்சிகளையும் அரசபடையினர் மேற்கொண்டிருந்தனர்.

கினிகிர என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட தொடர் படைநகர்வுகள் மூலம் - புலிகள் கைப்பற்றிய சில பிரதேசங்களை மட்டுமே படையினர் மீளக் கைப்பற்றிக் கொண்ட நிலையில் - புலிகளின் போரியல் பலம் அதிவீச்சுடன் இருந்தது.

இந்த நிலையில் - தமது மற்றுமொரு அரசியல் நகர்வாக - புலிகள் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் திகதி ஒருதலைப்பட்சமான போர் ஓய்வை அறிவித்திருந்தனர்.

இந்தப் போர் ஓய்வுக்கு அரச தரப்பிடமிருந்து உரியபதில் கிடைக்காததால், நான்கு மாதகாலத்தில் அதை விலக்கிக்கொள்ளும் முடிவுக்குப் புலிகள் வந்தனர். 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி போர் ஓய்வு முடிவுற்ற நாளிலேயே, ஆனையிறவை மீளக் கைப்பற்றுவதற்கான பெரும் படைநகர்வை அரசபடைகள் ஆரம்பித்தன.

இராணுவத்தின் 53 ஆவது, 55 ஆவது டிவிசன்கள் - 51, 52 ஆவது டிவிசன்களின் பக்கபலத்துடன் ஆனையிறவை நோக்கி முன்னேறின. கிளாலி, முகமாலை, நாகர்கோவில் என மூன்று முனைகளில் முன்னெடுக்கப்பட்ட படைநகர்வைப் புலிகளின் படையணிகள் மூர்க்கமாகப் போரிட்டு முறியடித்தன.

இந்தத் தீச்சுவாலை முறியடிப்புச்சமர் ஏப்ரல் 28 ஆம் திகதி நிறைவுபெற்றது. இந்த முறியடிப்புச் சமரில் 500 இற்கும் அதிகமான படையினர் உயிரிழந்ததுடன், 2000 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

தீச்சுவாலை முறியடிப்புச் சமரில் புலிகளின் படையணிகள் கைக்கொண்ட போர்த் தந்திரங்கள் - பத்தாயிரத்துக்கு அதிகமான முன்னணிக் காலாற்படையினரையும், அவர்களுக்குப் பக்கபலமாக முன்னேறிய டசின்கணக்கான டாங்கிகள், கவசவாகனங்களையும், குண்டுகளை வீசிக்கொண்டிய பல்குழல் பீரங்கிகள், ஆட்லறிகள், கிபிர், மிக் ஜெட் விமானங்களின் தாக்குதல் பலத்துக்கு முன்பாக மண்டியிடவேண்டிய நிலையைத் தோற்றுவித்தன.

தீச்சுவாலை முறியடிப்புடன்தான் சமாதானத்தின் கதவுகள் அகலத் திறக்கப்பட்டன என்றால் மிகையில்லை. புலிகள் இராணுவரீதியில் தோற்கடிக்கப்பட முடியாத சக்தி என்பதை உணர்ந்துகொண்ட ஐ.தே.க, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க மக்களின் ஆணையைக் கோரியது.

2001 ஆம் ஆண்டில் மீண்டும் தேர்தல் வந்தபோது, புலிகளுடன் சமாதானப் பேச்சில் ஈடுபடுவது என்ற கொள்கை முதன்மைப்படுத்தப்பட்டதன் மூலம் - ஐ.தே.கவுக்கு வெற்றி வாய்ப்புக்கிட்டியது. 'போர் மூலம் சமாதானம்' என்று முழக்கமிட்ட பொ.ஐ.முக்கு இந்தப் போர் மூலமே அரசியல் ரீதியாக பெரும் பின்னடைவு ஏற்பட்டது.



தீச்சுவாலை முறியடிப்புச் சமர் இடம்பெற்ற பத்தாவது மாதமே அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு உடன்பாட்டில் கைச்சாத்திட்டு - போர்நிறுத்தம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவர முடிந்தது. இன்றுவரை நீடிக்கும் இந்தப் போர்நிறுத்தமே - இதுவரை இலங்கையில் நடைமுறையிலிருந்த நீண்டகாலப் போர்நிறுத்தம் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பல்வேறு இராணுவரீதியான நெருக்குவாரங்கள் இடம்பெற்றபோதும் - போர்நிறுத்தம் முறிக்கப்படாமல் நிதானமாகக் கடைப்பிடிக்கப்படுவதற்குப் புலிகள் இராணுவரீதியாகவும், அரசியல்ரீதியாகவும் சமீபகாலத்தில் பெற்றுள்ள அசுர வளர்ச்சியே காரணமாகும்.

இன்னொரு போரைத் துவக்கினால், அது இலங்கைத்தீவைப் பிளவின் வாசலுக்குத்தான் கொண்டு செல்லும் என்பதை அனைத்துத் தரப்பினரும் அறிந்துள்ளனர். இதனால்தான், முன்னர் புலிகளைப் போர் மூலம் அடக்கவேண்டும் எனக்கூறிய ஜே.வி.பி., பொ.ஐ.மு எல்லாமே இன்று மீண்டும் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும் எனக்கோரி நிற்கின்றன.

தீச்சுவாலை முறியடிப்பின் மூலம் திறந்துவிடப்பட்ட சமாதானக் கதவுகள், ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுக்களுக்கும் வித்திட்டுள்ளது. இந்தச் சமாதானப் பேச்சுக்களில் எட்டப்பட்ட தீர்மானங்கள் உரியவாறு நிறைவேற்றப்படாத சூழலில் - புலிகள் தற்காலிகமாகச் சமாதானப் பேச்சுக்களிலிருந்து விலகிக்கொண்டுள்ளனர்.

இத்தகைய சூழலில் ஆனையிறவுப் பெருந்தள வீழ்ச்சி மற்றும் தீச்சுவாலை முறியடிப்பு என்பன சமாதானக் கதவுகளை எவ்வாறு திறந்துவிட்டன என்பது ஒருபுறமிருக்க - திறந்துவிடப்பட்ட சமாதானக் கதவுகள் அடைக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டியதும் அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது.

சமாதானத்துக்காக இப்போது நடைபெறும் அரசியற்போரின் பரிமாணங்கள் மாற்றமடையாமல் பேணப்படுவதன் மூலமே - எதிர்பார்க்கப்படும் நிரந்தர சமாதானத்துக்கு வழி பிறக்கும்.

ஆனையிறவும், தீச்சுவாலையும் ஏற்படுத்திய படிப்பினைகளிலிருந்து அரசாங்கம் பாடம் கற்கத்தவறினால் அது சமாதானத்துக்கு ஆபத்தான விளைவுகளையே தோற்றுவித்துவிடும்.

# யாழ். செயலக செயற்பாட்டு கிளை சாவகச்சேரியில் திறக்கப்படும்

யாழ்.அரச செயலக செயற்பாட்டு அலுவலகத்தின் கிளையொன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் சாவகச்சேரியில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தத்தில் பாரிய அழிவிற்குள்ளாகியுள்ள தென்மராட்சிப் பிரதேசத்தை மீளப்புனரமைக்கவென வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தவேலைத்திட்டங்கள் யாழ்.அரச அதிபரின் நேரடி அவதானிப்பின் கீழ் மேற்கொள்ளவும், தென்மராட்சி மக்களுக்கும் - அரச செயலகத்திற்குமிடையேயான தொடர்பை ஏற்படுத்தவுமே இச்செயலகக்கிளை அலுவல்கம் அமைக்கப் படவுள்ளது.

இந்த அலுவலகம் ஊடாக மக்கள் நேரடியாக அரச அதிபருடன் தொடர்பினை ஏற்படுத்த முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சார்ஸ் நோய் பரவுவதால் சீனத் தலைநகர் முடக்கம்



எங்கும் எதிலும் 'சார்ஸ்'

உயிர்க்கொல்லி நோயான 'சார்ஸ்' அச்சுறுத்தல் சீனாவில் தீவிரம்பெற்று வருவதைத் தொடர்ந்து தலைநகர் பீகிங்கிலுள்ள சினிமாத் திரையரங்குகள், மதுபானச் சாலைகள், இணையவழி மையங்கள் என்பவற்றை மூடிவிடுமாறு சீன அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

மக்கள் பெருமளவு கூடுகின்ற பகுதிகள் - அவை வர்த்தக மையங்களாக இருந்தாலும், களியாட்ட விடுதிகளாக இருந்தாலும் அவற்றை மறுஅறிவித்தல்வரை மூடவேண்டுமென கடுமையான பணிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது.

'சார்ஸ்' நோயைக் கட்டுப்படுத்துவதில் சீனா தாமதம் காட்டியதான விமர்சனங்களைத் தொடர்ந்து - சீனாவின் சுகாதார அமைச்சர் பொங் வெங்காங் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளதாக 'சின்குவா' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் புஷ், சீனத் தலைவர் ஹு ஜின்ரோவுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு - 'சார்ஸ்' நோயினால் பலியானவர்களின் குடும்பங்களுக்குத் தனது அனுதாபங்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

சீனாவிற்கு 'சார்ஸ்' நோயைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் உதவுவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க - பிராந்திய ரீதியாகச் 'சார்ஸ்' நோயைக் கட்டுக்குள் கொண்டுவரும் முயற்சிகள் பற்றி ஆராய்வதற்காக கிழக்காசிய நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் கோலாலம்பூரில் சந்திப்பொன்றை நடத்தியிருக்கின்றனர்.

'சார்ஸ்' நோய் பரவுவதற்கு அஞ்சி - போக்குவரத்துக்களை முழுமையாகக் கட்டுப்படுத்துவதையும், பயணிகள் சென்றுவருவதைத் தடுப்பதையும் - கண்மூடித்தனமாக மேற்கொள்வதில்லை என இச்சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஹொங்கொங்கில் மட்டும் 'சார்ஸ்' நோயினால் பலியானோரின் எண்ணிக்கை 133 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சீன பஸ் நிலையமொன்றில் 'சார்ஸ்' பீதியால் - தனது உடல் வெப்ப நிலையை பரிசோதிக்கக் கோருகிறார் யுவதியொருவர். சீனாவில் முக்கிய பஸ் நிலையங்களில் உடனடி மருத்துவ மையங்கள் தற்போது இதற்கென விசேடமாகத் திறக்கப்பட்டிருக்கின்றன.



பஸ் நடத்துநரும், பிரயாணிகளும் - இதுவும் ஒரு சீனக் காட்சி.



வடகொரியாவுக்கு வரும் தென்கொரிய உயர்மட்டக் குழுவினருக்கு, விமானத்தில் வைத்தே உடல் வெப்பமானிகள் வழங்கப்படுகின்றன - 'சார்ஸ்' அச்சுறுத்தலைத் தவிர்த்துக்கொள்ள.



இது 'சார்ஸ்' அல்ல - அதேயளவு தீவிரம் கொண்ட தேர்தல் காய்ச்சல். ஆர்ஜண்டீனாவில் பரவியிருக்கிறது. புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில் அங்கவீனமுற்ற ஒருவர் வாக்களிக்க இராணுவ வீரர் உதவுகிறார்.

# ஆசிரியை கடத்தப்பட்டு கொலை கொலம்பியாவில் பயங்கரம்!



வன்செயல் தணியாத நாடு

அரசியல் கொலை ஒன்றைச் செய்ய மறுத்த நபரின் மகளை கொலம்பிய இடதுசாரி கெரில்லாக்கள் கொலை செய்துள்ளனர்.

இவரின் மகளைக் கடத்திச் சென்ற இடதுசாரி கெரில்லாக்கள், அப்பகுதியில் வாழும் வலதுசாரி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கொலை செய்யவிட்டால் மகளை கொல்லப்போவதாக மிரட்டியிருந்தனர்.

இதற்கு அப்பெண்ணின் தந்தை மறுத்தபோது - அவரின் மகள் கொல்லப்பட்டு சடலம் வீதியில் போடப்பட்டிருந்தது.

ஜனாதிபதி அல்வாரோ உர்பி, இந்தக் கொலை முட்டாள்தனமானது எனக் கண்டித்துள்ளார்.

கொல்லப்பட்டவர் 25 வயதான பாடசாலை ஆசிரியை. இவர் கடந்த திங்களன்று பாடசாலைக்கு சென்று கொண்டிருந்தபோதே கடத்தப்பட்டார்.

இவரைப் படுகொலை செய்தவர்கள், தேசிய விடுதலை இராணுவம் என்ற கெரில்லா அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது.

# இரசாயன ஆயுத பாகங்கள் ஈராக்கில் மீட்கப்பட்டதாம்!

உலகவலம்

ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் உருவாக்கப் பயன்படும் சில கருவிகளை மீட்டுள்ளதாக பென்ரகன் அறிவித்துள்ளது. எங்கே, எப்போது இவை மீட்கப்பட்டன என்பது பற்றி பென்ரகன் குறிப்பிடவில்லை.

அடையாளங்கள் அற்ற 14 பீப்பாய்கள், பய்ஜி நகரில் மீட்கப்பட்டதாகவும் அதே சமயம், நகரும் ஆயுத சோதனைச்சாலை ஒன்றை அமெரிக்க இரசாயன ஆயுத நிபுணர்கள் பரிசோதித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# வளைகுடா விஜயத்தினை ரம்ஸ் பீல்ட் ஒத்திவைத்தார்

(வொஷிங்ரன்)

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட்டின் ஆப்கானிஸ்தான் மற்றும் வளைகுடாவுக்கான பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அயர்லாந்து அருகே, அவர் சென்ற விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அவரின் விஜயம் அடுத்தவார இறுதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனினும், இவரின் விஜயம் பிற்போடப்பட்டதற்குப் பாதுகாப்புக் கார ணங்களும் இருக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

"ஆப்கானிலும், ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளுக்கு அரசின் நன்றிகளைக் கூறவே அங்கு செல்கிறேன். வெற்றியைக் கொண்டாடவல்ல" என ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார். இந்த விஜயத்தின்போது ஈராக்கிற்கும் அவர் செல்லலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



## அல் கொய்டாவுடன் சதாமுக்கு தொடர்பு; பிரிட்டிஷ் பத்திரிகை தகவல்

(லண்டன்)

பக்தாத்தில் மீட்கப்பட்ட சில ஆவணங்கள் மூலம் சதாமுக்கும் ஒசாமா பின்லேடனுக்கும் தொடர்புகள் இருப்பது உறுதியாகியுள்ளதாக பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பக்தாத்தில் உள்ள ஈராக்கிய புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்திலிருந்து இந்த ஆவணங்கள் மீட்கப்பட்டதாக 'சண்டே ரெலிகிராப்' கூறுகிறது.

1998 இல் அல்கெய்டா பிரதிநிதி ஒருவர் பக்தாத் வந்திருந்தமையும் அந்த அரபுமொழி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வன்முறை அச்சத்தின் மத்தியில் யேமனில் பொதுத்தேர்தல்கள்



ஒன்றிணைந்த யேமன் நாட்டில் 1990 இற்கு பின்னர் மூன்றாவது தேர்தல் நடைபெறுகிறது. தேர்தலின்போது வன்முறைகள் வெடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் கண்காணிப்பில் பல வெளிநாட்டு கண்காணிப்புக் குழுக்களும் ஈடுபடவுள்ளன.

யேமனில் ஒசாமா பின்லேடனுக்கு ஆதரவானவர்கள் அதிகமாக இருப்பதால் வன்முறைகள் கூடுதலாக எதிர்பார்க்கப்படுகிறது. 2000 ஆம் ஆண்டு யேமனின் ஏடன் துறைமுகத்தில் தரித்துநின்ற அமெரிக்கப் போர்க் கப்பலான கோல் மீது அல்கெய்டா தற்கொலைதாரிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 17 அமெரிக்கப் படைகள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜகார்த்தா விமானநிலையத்தில் குண்டு வெடிப்பு; அறுவர் காயம்!

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் குறைந்தது ஆறு பேர் காயமடைந்தனர். விமான நிலைய உணவு விடுதியினுள் இக் குண்டு வெடித்துள்ளது.

கண்ணாடிச் சிதறல்களே காயங்களுக்குக் காரணம் என்றும் வெடித்த குண்டு சக்தி குறைந்த உள்ளூர் தயாரிப்பே எனவும் இந்தோனேஷியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேபோன்ற ஒரு குண்டு கடந்த வாரம் இங்குள்ள ஐ.நா அலுவலகத்திலும் வெடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாதுகாப்பில் ஒட்டையா...?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளின் கடிதத்தை அரசு ஆராய்கின்றது!

## சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேனாட் தகவல்

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான அடுத்த நிலைபற்றி அரசாங்கத் தரப்பு ஆராய்ந்து வருகின்றது எனத் தெரிவிக்கப்படு கின்றது.

இந்த விடயம் தொடர்பாகத் தற்சமயம் அரசதரப்பின் பல மட்டங்களிலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருவதாகச் சமாதானச் செயலகம் அறிவித்திருக்கிறது.

இதன் பணிப்பாளர் நாயகம் பேனாட் குணதிலக கருத்துத் தெரிவிக்கையில் -

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டதற்கான காரணங்களைத் தெரிவிக்கும் விடுதலைப் புலிகளின் கடிதத்தை, அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்திருக்கிறார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கான வழிமுறைகள் எதுவும் கைவிடப்படவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இதேவேளை - கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் தகவல் தருகையில், சமாதானச் செயலகத்துடன் தாம் ஒழுங்கான தொடர்பைப் பேணிவருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

எதிர்காலச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறக்கூடிய வாய்ப்புக்கள் பற்றி பணிப்பாளர் நாயகம் பேனாட் குணதிலகவும், நோர்வேத் தூதுவரும் ஏற்கனவே கலந்துரையாடியுமுள்ளனர்.

ஆனையிறவுத் தள பெருவெற்றி நிகழ்வுக்கான

# வெற்றிக் கேடயம் செல்லும் இட ஒழுங்குகள் விபரம்!

ஆனையிறவு பெருந்தள வெற்றி விழா மற்றும் தீச்சுவாலை முறியடிப்புச் சமர் வெற்றிவிழா ஆகியவற்றை முன்னிட்டு, யாழ். குடாநாட்டிலிருந்து வெற்றிக்கேடயம் பளைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இவ்வெற்றிக் கேடயம் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் கைமாறி காவிச் செல்லப்படும் இட ஒழுங்குகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி - யாழ். கச்சேரியடியிலிருந்து ஆரம்பிக்கும் வெற்றிக்கேடயம் எடுத்துச் செல்லப்படும் நிகழ்வு - அங்கிருந்து புங்கன்குளம் சந்தி, செம்மணிவெளி, செம்மணி வளைவு, சிக்மா கொம்பனி, நாவற்குழிச்சந்தி, வயோதிபர் இல்லத்தடி, கைதடிப் பிள்ளையார் கோவில், ரயர் கொம்பனி, மட்டுவில் சந்தி, நுணாவில் வைரவர் கோவிலடி, சாவகச்சேரி நகர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, அரசடி, வீரசிங்கம் மகாவித்தியாலயம், இராமா கோவிலடி, கொடிகாமம் சந்தி, மிருசுவில் வைத்தியசாலை, உசன் சந்தி, ஆசைப்பிள்ளை ஏற்றம், எழுதுமட்டுவாழ் சந்தி, இராணுவச் சோதனைச்சாவடி, விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடி, இத்தாவில், பளை சோதனைச்சாவடி, பளைச் சந்தியை அடைந்து அங்கிருந்து பளை மைதானத்தில் நிறைவடையும்.

## சர்வதேச சட்டங்களுக்கு...

முடிவுகள் எடுக்கப்படும்.

கடல் மோதல் தவிர்ப்புப் பற்றி ஆராய்வதற்கான குழுக்கள் தேசிய மட்டத்திலும், பிராந்திய மட்டத்தில் - திருமலை மற்றும் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்படும்.

இருதரப்பும் தமது படகுகளை சர்வதேச மற்றும் ஐ.நா.சட்ட விதிகளுக்கு அமைவாக அடையாளப்படுத்த வேண்டும்.

இரு தரப்பு படகுகளும் கடலில் பயணங்களை மேற்கொள்ளும்போது தொடர்பாடலுக்கு 'சனல் 16' அலை வரிசைக்கு வரவேண்டும்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையும் எந்தவொரு படகையும் சோதனையிடும் அதிகாரம், கடற்படைக்கு உள்ளது. இவ்வாறு, சோதனையிடப்படும்போது - படகுகளை அழித்தல், தடயங்களை அழித்தல், தற்கொலைத் தாக்குதல் நடத்துதல் என்பன போர்நிறுத்த மீறல்களாகக் கணிக்கப்படும்.

கடற்பரப்பில் பயணிக்கும்போது இருதரப்புக்குமிடையே முறுகல் நிலை தென்பட்டால், இரு தரப்புமே அப்பகுதியிலிருந்து விலக்கிக் கொள்ளவேண்டும்.

இலங்கைக் கடற்பகுதிக்குள் எந்தவொரு மூன்றாந்தரப்பு மீதும் - இருதரப்பும் தாக்குதல் நடத்தக் கூடாது. சட்டரீதியாகப் பயணிக்கும் கப்பல்கள் மீது கவனிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமது பகுதிகளில் புலிகள் பயிற்சிகளை மேற்கொள்ளலாம். அதற்கு வெளியே ஆயுதங்களை அவர்கள் கொண்டு செல்லமுடியாது எனவும் புதிய தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பேச்சு பற்றி...

எடுத்துரைத்து வருகின்றேன். இதன் ஒருபகுதியாகவே யாழ்ப்பாணத்திற்கும் வந்துள்ளேன் எனவும் -

படையினருக்கு அரசின் சமாதான செயலகம் தொடர்பாகவும் வட-கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழு தொடர்பாகவும் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றம் தொடர்பாக எடுத்துரைத்துள்ளேன் எனவும் தெரிவித்தார்.

(லி)

## மாநகரசபை...

இக்கூட்டத்தில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் சிவபாதம், முன்னாள் யாழ். மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம், வைத்திய குணநாதன், வைத்திய கலாநிதி தியாகராஜா, வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் மற்றும் உயரதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்

இக்கூட்டத்தின் போது, சி.வி.கே. சிவஞானம் - அரசாங்கம் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் எனவும், மக்களின் இயல்பு வாழ்க்கையையும் மீள்குடியமர்வையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனவும், யாழ். மாநகரசபையிடம் இராணுவம் எடுத்துக்கொண்ட காணி மீளக் கையளிக்கப்படவேண்டும் எனவும் எடுத்துரைத்தார்.

வைத்திய கலாநிதி குணநாதன் - மக்களின் மருத்துவ தேவைகள் குறித்தும், யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழகம் ஆகியவை நவீனமுறையில் புனரமைப்புச் செய்யப்படவேண்டும் எனவும், யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றினை அமைப்பதன் அவசியம் தொடர்பாகவும் எடுத்துரைத்தார்.

வலயக்கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் - கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் - அதிபர், ஆசிரியர்களின் பதவி உயர்வுகள், சம்பள நிலுவைகள், நியமனங்கள் தொடர்பாகவும் பிரதமரின் செயலாளருக்கு எடுத்துரைத்தார்.

மக்களின் பிரச்சினைகள் பலவற்றை கேட்டறிந்து கொண்ட பிரட்மன் வீரக்கோன், இவற்றைத் தாம் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்தார். (லி,09)

## ஒட்டுமொத்த...

ஆழ வேரூன்றியவர்.

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் மூலம் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியான காலங்களிலெல்லாம் தனது இனத்தின் தன்மானத்திற்காக ஓங்கிகுரல் கொடுத்தவர். யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்த சிங்கள இராணுவம், ஆண்டகையிடம் சென்று, தாங்கள் தமிழ்மக்களைக் காப்பாற்றத்தான் வந்துள்ளோம் என்று கூறித் தம்மை வெளிப்படுத்தியபோது மௌனம் சாதித்த ஆண்டகை, கடைசியாகக் கூறிய பதில், மானமுள்ள தமிழன் ஒருபோதும் இதனை ஏற்றுக்கொள்ளமாட்டான் என்பதாகும்.

இக்கருத்தை வெளிப்படுத்தியதன் மூலம், ஆண்டகை - தமிழ் மக்கள்மீது கொண்ட நேயமும் விசுவாசமும் அவர்களுக்காகச் சிந்திக்கும் இயல்பும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய ஒருவரையே இத்தமிழ்ச் சமூகம் இன்று இழந்து நிற்கின்றது.

வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள், சமாதான சமிக்ஞையின் மூலம் தமது பிரச்சினைகளின் தீர்வுக்கான அறிகுறிகளைத் தரிசிக்கின்ற இந்நேரத்தில், வழிகாட்டிச் செல்லக்கூடிய ஆசானை இழந்து நிற்பது கவலைக்குரியதாகும்.

ஆண்டகையின் இழப்பிற்கு எமது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்புலிகளுக்கு...

ஏயார் மார்ஷல் ஹரி குணதிலக இதுகுறித்துக் கருத்து தெரிவித்தபோது, மன்னார் கடற்பரப்பில் இந்திய மீனவர்களைக் கண்காணிக்கும் பணியில் கடற்படையுடன் இணைந்து செயற்படாமல், தமிழர்கள் தாமாகவே தனித்துச் செயற்படுவதாக தெரிவித்ததுடன், புலிகளைத் தனியான கடற்படைப்பிரிவாக அங்கீகரித்தால் மேலும் நெருக்கடி அதிகரிக்கும் என்றும் கூறினார்.

முன்னாள் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஹமில்டன் வணசிங்க, கண்காணிப்புக்குழு இரட்டைவேடமிடுவதாக சந்தேகம் கிளப்பினார். அத்துடன், கண்காணிப்புக்குழு புலிகளின் முகவர்களாகத் தொழிற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தனியான கடற்படைப் பிரிவாக புலிகளை அங்கீகரித்தால், அது அரசியலமைப்பை மீறும் செயலாகும். அத்துடன்- இரு நாடுகள், இரு கடற்படைகள் என்ற சட்ட அங்கீகாரமும் புலிகளுக்கு கிடைத்துவிடும் என்றும் லெப்.ஜெனரல் ஹமில்டன் வணசிங்க மேலும் தெரிவித்தார்.

### பொதுச்சாதாரண பரீட்சை மாதிரி வினாத்தாள்

பொதுஅறிவு, நுண்ணறிவு வினாக்கள் கொண்ட, க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பொதுச்சாதாரணப் பரீட்சை மாதிரி வினாத்தாள், நாளை மறுதினம் - 'மாணவர் அரங்கில்' பிரசுரமாகிறது.

STP
எமது சாவகச்சேரிக் கிளையில்
பின்வரும் பாடநெறிகள்
01.05.03 முதல்
ஆரம்பிக்கப்படவுள்ளன.
மாணவர்கள்
பதிவினை மேற்கொள்ளவும்.
Dip. In MS Office
Desktop Publishing
baby dod com (சிறுவர்களுக்கானது)
Director Sankaththanai, Chava.

# வெற்றிச் சமர் நினைவாக சைக்கிளோட்டப் போட்டி!

## முதல் ஐந்து இடங்களும் யாழிற்கே

ஆனையிறவு வெற்றிச் சமரின் 3 ஆம் ஆண்டு நிறைவினையும், தீச்சுவாலை முறியடிப்பின் 2 ஆம் ஆண்டு நிறைவினையும் முன்னிட்டு, தமிழீழ விளையாட்டுத்துறையினரால் மாபெரும் சைக்கிளோட்டப் போட்டி நேற்றைய தினம் நடத்தப்பட்டது

காலை 7 மணிக்கு புளியங்கூடல் பேருந்து நிலையப் பகுதியில் ஆரம்பித்த சைக்கிளோட்டப்போட்டி, பிரதான வீதியூடாகச் சென்று பளைச் சந்தியில் முடிவடைந்தது.

வடக்கு - கிழக்கின் பல பகுதிகளிலிருந்தும் 80 இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றிய மேற்படி போட்டியில் - ம.நிர்மலேஸ்வரன் (யாழ். மாவட்டம்), முதலாம் இடத்தையும், ந.ஜெயசுதன் (யாழ். மாவட்டம்) இரண்டாம் இடத்தையும், ரி.கமல்ராஜ் (யாழ்.மாவட்டம்) மூன்றாம் இடத்தையும், க.கமலேஸ்வரன் (யாழ். மாவட்டம்) நான்காம் இடத்தினையும், க.லோகேஸ்வரன் (யாழ். மாவட்டம்), ஐந்தாம் இடத்தினையும், மு.பக்திநாதன் (வவுனியா மாவட்டம்) ஆறாம் இடத்தினையும், பு.சயந்தன் (யாழ். மாவட்டம்) . ஏழாம் இடத்தினையும், செ.யோகேஸ்வரன் (வவுனியா மாவட்டம்) எட்டாம் இடத்தினையும் பெற்றனர்.

போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் இடங்களைப் பெற்றவர்களுக்கான சிறப்புப் பரிசில்களும், சான்றிதழ்களும், ஏனையவர்களுக்கான சான்றிதழ்களும், முழுமையான ஓட்டத்தினை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களும் இன்று நடைபெறவுள்ள வெற்றி விழாவிலே வழங்கப்படவுள்ளன.

## யாழ்.செயலகக்...

பங்குபற்ற அனுமதி மறுக்கப்பட்டது. எனினும், செய்தி சேகரிக்கவும், புகைப்படம் பிடிக்கவும் உள்நுழைந்த பத்திரிகையாளர்களை, யாழ். அரச அதிபர் பணிமனையில் கடமை புரியும் சிற்றூழியர்கள் தடுத்து நிறுத்தினர்.

எம்மை கூட்டத்தில் பங்குபற்ற அனுமதிக்காவிடினும், அக்கூட்டத்தை புகைப்படம் எடுக்கவாவது அனுமதிக்க வேண்டும் என அங்கு நின்ற பத்திரிகையாளர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இறுதியில் கூட்டம் ஆரம்பித்து ஏறக்குறைய 45 நிமிடத்திற்கு பின்னரே, கூட்டம் நடைபெறும் இடத்திற்குள் நுழையாமல், வெளியில் ஓர் மூலையில் நின்று புகைப்படம் எடுப்பதற்கு மட்டும் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சந்தர்ப்பத்தில், பிரட்மன் வீரக்கோன் அரச நிர்வாகங்களினதும், புனர்வாழ்வு நடவடிக்கைகளினதும் வெளிப்படைத் தன்மை குறித்து அரச அதிபருக்கும் அங்கு கூடியிருந்த ஏனையவர்களுக்கும் விளக்கி உரையாற்றிக்கொண்டிருந்தார்.

இதன்போது, உரையாற் றிக் கொண்டிருந்த பிரட்மனை, கூட்டத்திற்கு முன்னால் சென்று புகைப்படம் பிடிக்க முயன்ற பத்திரிகையாளர் ஒருவரை, அங்கு அமர்ந்திருந்த யாழ். செயலக உயரதிகாரி ஒருவர் தடுத்துநிறுத்தியதுடன், அக்கூட்டத்தின் மத்தியில் அவரை அவமதிப்புச் செய்வதாக நடந்துகொண்டார்.

யாழ். அரச நிர்வாகங்களின் நிலைமைகள் இவ்வாறான நிலையில் இருக்க, பிரதமரின் செயலாளர் அரச நிர்வாகத்தின் வெளிப்படைத் தன்மை குறித்து எடுத்துரைத்தும் என்ன பயன் என அங்கு கூடிநின்ற பத்திரிகையாளர்கள் கேள்வியெழுப்பினர்.

இதேவேளை, இக்கூட்டத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் குளிர்பானம் வழங்கப்பட்டது. இதன்போது கூட்டம் நடைபெற்ற மண்டபத்திற்கு வெளியில் பத்திரிகையாளர்களும், இராணுவத்தினரும், தென்பகுதி சிங்களவர்களும் அமர்ந்திருந்தனர். அப்போது இராணுவத்தினருக்கும், தென்பகுதி சிங்களவர்களுக்கும் குளிர்பானம் வழங்கப்பட்டபோதிலும், அருகில் அமர்ந்திருந்த பத்திரிகையாளர்களுக்கு குளிர்பானம் வழங்கப்படவில்லை. இச்செயற்பாடானது பத்திரிகையாளர்கள் திட்டமிட்ட முறையில் அவமதிப்புச் செய்யப்படுவதைக் காட்டுகிறதென அங்கிருந்த மூத்த பத்திரிகையாளர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

## ★மரணத்திலும் உம்பணியை மறவோம் நாம்★



கரவெட்டிப்பங்கின் முன்னாள் பங்குத்தந்தையாகவும் திருஇருதயக்கல்லூரியின் அதிபராகவும் இரு ஆண்டுகள் அரும் பணியாற்றி - மாண்புமிகு யாழ். ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டு இருபது ஆண்டுகள் சேவையாற்றி ஓய்வுபெற்ற பின் மறைந்த -

மேதகு.வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

பங்குத் தந்தையும் பங்கு மக்களும்,
கரவெட்டி ஆலயத் திருச்சபை.

(சி-878)

## பிரிவுத் துயர் பகிர்வு



ஓட்டத்தை ஓடி இலக்கை அடைந்து
ஆத்ம திருப்தியோடு - எங்கள் ஆயர்
இருபத்தைந்து ஆண்டுகள் மறைமாவட்டத்தின்
அச்சாணியும், ஐம்பது வருடங்களின்
குருத்துவ தோட்ட பணியாளியுமாய் நிமிர்ந்த
உயர்ந்த விருட்சம் தலைசாய்ந்தது.
யாழ். மாவட்டத்தின் இதயம் ஒருமுறை நின்று துடித்தது.
ஆயனை இழந்து விட்டோம்.
அம்மானை பொக்கிஷத்தை இழந்து விட்டோம்.
உறுதி கலந்திருக்கும் கம்பீர வார்த்தைகளை இழந்து விட்டோம்.
வழிகாட்டி ஒருவரை இழந்து விட்டோம்.
ஆனாலும் ஆண்டவரைக் கேட்கிறோம்.
நீர் இவர் பரிசாய் இருந்தருளும் என்று.

பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

புனித மடுத்தீனார் குருமட
அதிபர், மாணவர்கள்.

(330)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.